விக்ருதி ௵ } ஆனி ௴ }

{ ஸம்புடம் - 9 { ஸஞ்சிகை - 6

92

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.

(அட்வொகேட்)

ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,

சென்னை—7.

{ JUNE 1950 { Vol. 9 No. 6.

189271

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	164
2	சிங்கப்பிரான் சீரேற்றம்	168
3.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	172
4.	இராமானுசன் இன்னநாள்	174
5.	மதுராலாபம்	177
6.	ஆஸ்திக்யம்	181
7.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	186
8.	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	187
9.	மாதரிச்வ பத ப்ரயோஜநம்	189
10.	செய்திகள்	190
11.	ஸம்பாதகரின் குறிப்புகள்	192

தேவை

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸுக்கு

ஒரு குமஸ்தா தேவை

ஸம்ஸ்க்ருதத்தில் 'சிரோமணி' பட்டம் பெற்றவர்களுக்குள்ளது போன்ற ஜ்ஞாநமும்; இங்கிலீஷில் கடிதப் போக்கு வரத்துகளை கவனித்துக் கொள்ளவும் கணக்குகளை எழுதவும் ஸம்ஸ்க்ருதம், தமிழ், மணிப்ரவாளம் இவைகளில் புரூப் (Proof) திருத்தவும் ஸாமர்த்யம் இருக்கவேணும். மற்ற விவரங்களுக்கு ஆபீஸுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

MAD



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9 | விக்ருதி ஸூ ஆனி மீ | ஸஞ்சிகை 6

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

—— :o: ——

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

அஹம்க்ரஹம் என்கிற பக்தி யோக ப்ரகாரத் திருநாமமும் அதை விளக்குவது. ஆழ்வாருடைய 'கடல் ஞாலத்' திருவாய்மொழியும் பரமாத்மாவேஶத்தால் வந்ததே. பரமாத்மாவேஶத்தில் தன்னையும் மறந்து அவனைப் போலவேயும் அவனாகவே எண்ணுவதும் அநுபவிப்பதுமான அந்தர்யாமி ப்ரஹ்மாவேஶ க்ரஹ நிலையாலே பாடுவது. 'கடல் ஞாலத் தீசன்வந் தேறக்கொலோ' என்று முதல் பாசுரத்திலேயே 'ஏறக்கொலோ' என்பதால் ஈச்வர க்ரஹாவிஷ்டத்வத்தைத் தெளிவிக்கிறார். தந்நிமித்தமான இந்த ஜகஜ்ஜந்மாதி ஸ்ரஷ்ட்ருத்வ நியந்த்ருத்வாத்யநுபவம். ஶேஷத்வமே உயிரென்றிருப்பவரைத் தன்னையே மறக்கும்படி ஆவேசித்து இப்படிப் பலாத்காரமாய் அநுபவிப்பிக்கச் செய்வது பரமாத்மாவின் க்ருபா ப்ரேம ரஸம். தன்னைப் போலவே ப்ரஹ்மணம் செய்யும் ரஸம். 'வந்தேற' என்பது இதைப் பேசுவதே.

“ [illegible]

[illegible] ”

என்று ஶ்ருதப்ரகாஶிகையில் அஹமர்த்த வாதத்தின் முடிவில் கூறப்பட்டது. தைவாவேஶத்தால் [illegible] அஹம் புத்தியும் நமக்கு அபிபூதமானாலும் ஆகலாம். ப்ரஹ்ம க்ரஹாவிஷ்ட மானதால் வரலாம். “ [illegible] ” என்ற யாஜ்ஞ்யவல்க்யர் வாக்யத்திற்கு

“ [illegible]

ஜீவ: [illegible] ”

என்று அர்த்தம் கூறப்பட்டது. ஸ்வாப்யய மென்னும் ஸ்வலய ஸ்திதி இது. எங்கே ஜீவ ப்ரஹ்மாபேதம் வந்து விடுமோ வென்று பயப்படவேண்டிய தில்லை. இங்கே ரஸ பரவஶத்தால் பரமாத்ம வஶமாயிருக்கும் காலத்தில் தன்னையும் மறந்த நிலையைக் கூறலாம். அதனாலே தான் '[illegible]' என்று ப்ரியகாந்தா பரிஷ்வங்க த்ருஷ்டாந்தத்தைக் கூறிப் புருஷோத்தமனையும் ஆசைக் காமினிப் பெண்ணாக வர்ணித்தது. '[illegible]' என்று பெண்ணுக்குப் பதியினிடமுள்ள காமம் எண்பெருக் கந்நல மென்பர். விஸ்தாரம் அதிகமாகிறது. இந்த்ர ப்ராணாதிகரணத்தில் '[illegible]' என்பதற்கு, 'இந்த்ரனுக்குள் பரமாத்மாவின்

18927

ஆவேச மிகுதி' என்று ஸ்ரீமத்வ மதப் பொருள். அநுபவங்களை நிறுத்திக் கொள்வோம். ச்லோகத்தின் பின்பாதியின் பொருளைக் கூறுவோம்.

முன்பாதியில் ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி தசை. அதில் ஸத்வ வ்ருத்தி ப்ராசுர்ய முண்டு. ரஜஸ் தமோ வ்ருத்திகள் நின்ற தசை. அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியில் ஸத்வ வ்ருத்தியு மில்லை. முன்பாதியில் 'सत्त्वोद्रेक' என்று தொடக்கத்தால் ஸத்வ வ்ருத்தி மாத்ர ப்ராசுர்ய முள்ள ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியை ஸூசித்தார். மநோ வ்ருத்திக ளில்லாமலே அப்யாஸ ஸம்ஸ்கார தார்ட்யத்தாலும், பகவத் ப்ரீத்யநுக்ரஹத்தாலும் தானே த்யேய ஸ்வரூபமாக அநுபவம் பெருகும் தசை. 'तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति' என்பதால் இந்த மேல் தசை கைகூடுவதை ஸூசிப்பதாக நினைக்கலாம். 'परात्परं पुरिशयं पुरुषमीक्षते' என்று ப்ரச்ந ச்ருதி. 'दीर्घदर्शिते' என்று முன்பாதியின் முடிவு. தர்சந ஸமாநாகாரத்தில் வைசத்யோத்கர்ஷங்கள் மேல் மேலும் உள்ளனவே. 'हृदि ध्यायतो निःशेषं पश्यन्' என்று நாடகத் தொடக்கத்தில் கூறியது கைகூடி வரும் காலம் இது. இங்கே நியதாப்தி ஸந்தி: 'अपृथक्सिद्धविशेष्यवस्तुनि' என்பதற்கு 'अपृथक्सिद्धविशेषणतया' என்று ஈசாவாஸ்ய பாஷ்யத்தில் இந்தப் பாதியில் ஸ்பஷ்டமாக எடுக்கும் 'पुरुषः सोऽहमस्मि' என்கிற 17-வது மந்த்ரத்தில் ஸ்வாமி கூறிய பதத்தையே ப்ரதிபத மென்போம். "पुरुषः पुरुषशब्दवाच्यः सोऽहमस्मि अहंशब्दो जीवद्वारा तदन्तर्यामिपर्यन्तः, स तस्य अपृथक्सिद्धविशेषणतया विश्राम्यति" என்று அங்கே பாஷ்யம். இங்கே 'नाथः' என்னும் பதம் 'पतिं विश्वस्य' என்ற 'விச்வ பதியும் விச்வ நியந்தாவும், விச்வாந்தர்யாமியும்' என்பதைக் குறிக்கிறது. பரமாத்மாவேசத்தால் வரும் பரமாத்மைகத்வ புத்தியால் இது முக்யமாகவே ஒட்டலாம்; ஸர்வாஹமில் இந்த அஹம் முழுகும். 'நதிகள் ஸமுத்ரத்தில் விழுந்து ஒன்றுவதுபோல' என்று உபநிஷத்து. முழுகுவ தென்பது மடிவதல்ல. முன்பு அநாதி காலமா யிருந்த தனிமை தவிருவதே யாகும். தனிமை நினைப்பால் நேர்ந்த அபாயங்களும் திண்டாட்டங்களும் நீங்கி ஜீவ னென்னும் உயிர் ப்ரஹ்ம மென்னும் ஆநந்த சைதந்ய ஸமுத்ரத்தில் கலந்து த்ருடப்பட்டு சாச்வதாநந்த ஸமுத்ரத்தில் சாச்வத நிலை பெறும். ஸர்வாஹமில் இந்த அஹத்திற்குக் காதல் மிகுதி என்னும் பக்தியாலும், பரமன் ப்ரீத்யாவேசத்தாலும் இன்ப லயம். ஸர்வாஹமான பரமாத்மாவின் அஹத்திற்குள் வேறின்றி ஒன்றி இந்த அஹம் விச்ரமித்து நிலைநிற்கவேணும். இது அத்யாத்ம தத்வ நிலை என்று ப்ரமாணங்கள் தெளிவிக்கின்றன. இப்பொழுது இந்த பக்தியோக ஸமாதி ஸமயத்தில் அஹ மென்னும் ஜீவமாத்ர அஹம், தானுள்பட ஸர்வத்திற்கும் அஹமான பரமாத்மாவிற்குள் லயித்து ஒடுங்கும் அவஸரம். 'ஒடுங்க வவன்கண்' என்பதை நினைக்கவேணும். அந்த ஸர்வாஹம் அர்த்தத்தி னுள்ளே பரிச்சிந்ந ஏகதேசம் போன்ற இது ஒடுங்கும் ஸமயம். கடவல்லியில் 5-ம் வல்லி 9-வது மந்த்ரத்தின் பாஷ்யத்தில்,

" [illegible] "

என்று ஸாதிக்கப்பட்டது. 'ஸர்வாத்மாக்களுக்கும் பரமாத்மா ப்ரத்யக்கான அஹமர்த்தமென்ற உண்மையைத் தெளிவது மிக்க கடினமாகையால், அதை த்ருடப்படுத்தத் திரும்பவும் கூறுகிறது' என்று அவதாரிகை. இந்த உபாஸகன் அஹமர்த்தத்திற்கும் அது விச்ராந்தி பூமியான மொத்த அஹமர்த்தம். பரமாத்மாவெனும் ஸர்வத்திற்கும் உள்ளான உள் தத்வம் இவனுக்கும் உள் அஹமாயும் இவனுக்கும் ப்ராப்யமான ஸ்வவிஸிஷ்ட ஸர்வாஹமோடு இவன் ஒன்றாகவேணும். விச்வத்திற்கும் ப்ரஹ்மத்திற்குமுள்ள விஸிஷ்டைகாத்ம்ய நிலை நம்முடைய தேஹாதி விவிக்தமான விசுத்தமான கேவலமான அஹமிற்குமுள்ளதே. எல்லோர்க்கு மஹமான விச்வ உயிரோடு நமக்கும் விஸிஷ்டைக்யாநுபவம் வரவேணும். கேவலம் ஸ்வமாத்ரத்தில் அஹம் புத்தி நின்றுவிடுவது தனக்கே அபாயம். அஹம் புத்தி ஜீவனென்னும் தன்னில் தொடங்கி, தன் கேவல ஸ்வரூபத்தைத் தழுவின தத்க்ஷணமே ஸர்வாஹமையும் சேர்த்துத் 'தான்' என்று தழுவி அதனுள்ளேயே விச்ரமிக்கவேணும். முன்பு தேஹ விஸிஷ்ட ஸ்வஸ்வரூபத்திலும், பிறகு நடுவே நடுவே ப்ரக்ருத்யாத்ம விவேக அப்யாஸத்தால், 'வ்யதிரேகஸ்தத்பாவாபாவித்வாத்' என்ற ஸூத்ரம் காட்டிய தன் சுத்த ஜீவஸ்வரூப மாத்ரத்திலும் வந்துகொண்டிருந்த அஹம் புத்தியை மாற்றி ஸ்வவிஸிஷ்ட பரமாத்மாவிற் குள்ளேயே நினைவு ஓடிக்கொண்டேயிருக்கும்படி மனதை த்ருடமாகப் பரிஷ்கரித்து த்யாநாநுபவத்தை வளர்க்கவேணும். ஸ்வஸ்ய ஸ்வமாத்ரத்வம் தத்வமாகாது. ஸ்வஸ்ய பரமாத்ம பர்யந்தத்வம் இல்லாமல் ஸ்வம் என்பது ஒரு வஸ்துவாகவே தேறாது. யதாவஸரம், யதா தக்ஷம் அநுபவப் பயிற்சி செய்யவேணும். '[illegible]' '[illegible]' 'ஊண் தந்து' முதலிய பாசுரங்கள் வெறும் பேச்சல்லாமல் நித்யமநுபவாரூடமாகவேணும்.

ஶததூஷணியில் அஹமர்த்தவாத மங்கள ச்லோகம் பின்வருமாறு:—

" [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ "

என்ற அந்த ச்லோகத்தி லுள்ளபடி யதார்த்தாநுஸந்தாநாநுபவத்தைப் பயிற்சி செய்யவேணும். அது தத்வநிலை. ப்ராப்யமான முக்தி அநுபவ நிலை.

" [illegible] " என்று சண்டமாருதம். ஆநந்தமய பரமாத்மாவினிடத்தில் தனக்கு அஹமநுபவ விச்ரமம் என்று கடைசியில் ஸாதித்தது. நிரதிஶய உஶாபந்ந ஸுகத்தின் அநுபவ பாரவச்யத்தில் தன்னை மறப்பதும் கூடும். '[illegible]' என்றது விச்வ ஶாரீரனை ஆநந்தமய வாக்யத்தில் கூறிய சாரீராத்மா

வென்னும் பரமாத்மாவைக் குறிப்பது. 'கவலயதி' என்று ஸாதிப்பதும் 'வாரிக்கொண்டு........தானென்னை முற்றப் பருகினன்' என்ற ஆழ்வார் அநுபவத்தை ஸூசிப்பது.

இங்கே வைஶிஷ்ட்யத்திலும் வைஶிஷ்ட்யாநுபவத்திலும் விசேஷணமான சுத்த ஜீவாத்மாஹமும், எல்லோர்க்கும் அஹமான பரமனுக்குள் ஒடுங்கிக் கலக்கும் யோகாவஸரம். 'அதஸ்மிந் தத்புத்தி:' என்று அத்யாஸத்திற்கு லக்ஷணம். அத்யாஸமென்பது ஆரோபம். மநஸ்ஸு நாமம் முதலிய ப்ரஹ்மமல்லாத வஸ்துக்களில் ப்ரஹ்ம புத்தியை ஶாஸ்த்ரோபதேஶத்தால் செய்து சில்வான ப்ரயோஜனங்களை அடையக்கூடும். ப்ரஹ்மமல்லாததில் ப்ரஹ்ம புத்தி செய்து உபாஸிக்கச் சொல்லும் அந்த விதிகளை 'த்ருஷ்டிவிதி' என்பர். அங்கே அத்யாஸமென்னும் ஆரோபம் உளதே. ப்ரஹ்மத்தினிடத்தில் அஹம் (நாண்) என்னும் புத்தியை 'அவனே நான்; நானே அவன்' என்று ஆவ்ருத்தி செய்து ப்ரஹ்மோபாஸநம் செய்வது முன்பு கூறிய த்ருஷ்டி விதிகளைப்போல த்ருஷ்டிவிதியாகாதென்பது 'நாத்யாஸஸாம்யஸாதம்' என்பதின் பொருள். "ஜீவாத்மாவிற்கு விஶேஷ்யமாகிய அந்த பகவான் நன்ருகப் பார்க்கப்பட்டிருக்கும்பொழுது, 'அந்த நாதன் நான்; நான் அவன்' என்கிற வேத வாக்யங்கள் ப்ரமத்தை விஷயமாக உடையவைக ளல்ல; அதாவது: நான் என்று இவை முதலாக ப்ரமிக்கப்பட்ட வஸ்துக்கள் அவனே என்கிற பொய்யான அர்த்தத்தைச் சொல்லுகிறன வல்ல; விட்டுப் பிரியாத விஶேஷணமாகையினல் ஶரீரத்தைச் சொல்லும் பதங்கள் வாஸ்தவத்திலேயே 'தேவன், மநுஷ்யன்' என்கிற பதங்களைப்போல 'எனக்கு அந்தர்யாமி அவன்; அவனுக்கு ஶரீரம் நான்' என்கிற அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்றபடி" என்று பின் பாதிக்கு ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமி ஸாதித்த பொழிப்புரை. "ஸமாதி தசையில் ஜீவபரைக்ய பாவனை தோன்றுவதும் வேதாந்தங்களில் அஹங்க்ரஹோபாஸநாதி ந்யாயத்தாலே ஸ்வரூபைக்ய ஜ்ஞாபக மன்று" என்று பரமத பங்கம் 21-வது அத்யாய ஸ்ரீ ஸூக்தி. பரமாத்மக்ரஹ ஆவிஷ்டமான தசையில் வரும் ஸர்வாத்ம பரமாத்மாநுபவம் அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளி லுள்ள விஶேஷண விஶேஷ்ய பாவமென்னும் தத்வ நிலையை மாற்றிவிடாது.

[தொடரும்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக் கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணு வீதம் டிபாஸிட் கட்ட வேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

சிங்கப்பிரான் சீரேற்றம்

[ஸ்ரீ. உப. தில்லையம்பூர் வித்வான் முடும்பை சக்ரவர்த்தி வேங்கடாசார்ய ஸ்வாமி]

ஸ்ரீமானான நாராயணன் ஆச்ரிதர்கள் உஜ்ஜீவிப்பதற்காக ஐந்து விதமாக சுபாச்ரயனா யிருக்கிறானென்று உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. அவை:— பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை யென்பன. இவற்றுள் பரம் என்பது வைகுண்டநாதன்; ஸ்ரீமந் நாராயணன்; பரமாத்மா; ஸத் என்னும் நாமங்களால் சொல்லப்படுகிறவர்; பரவித்யைகள் முப்பத்திரண்டுக்கும் விஷய மானவர். வ்யூஹம் என்பது ஸங்கர்ஷணர் ப்ரத்யும்நர் அநிருத்தர் இவர்களும், கேசவாத்யவதாரங்களும். விபவம் என்பது, ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள். அந்தர்யாமி என்பது எங்கும், (அதாவது: சிலா காஷ்ட கட படாதிகளில் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் சொல்லியபடி) இருக்கும் ரூபங்கள். அர்ச்சை யென்பது, ஸ்ரீரங்கம் திருவேங்கடம் முதலிய இடங்களிலுள்ள தைவம் ஸைத்தம் ஆர்ஷம் ஸ்வயம் வ்யக்தம் முதலான உருவங்கள். இது விபாக வாக்ய மாதலால் ஒன்றுக்கு மற்றொன்றின் அஸாதாரண தர்மம் கிடையாது. ஆனால் எல்லா ரூபங்களிலும் பரத்வாதிகள் அநுஸந்திக்கப்பட வேண்டும். அப்படியே பாஞ்சராத்ரங்களின் கருத்து.

இந்த ஐந்தும் சேர்ந்த ஸ்வரூபமே ஸ்ரீ ந்ருஸிம்ஹன். இவருக்குப் பரத்வம் எப்படி யென்றால்: சாந்தோக்யோபநிஷத்தில் நான்காவது ப்ரபாடகம் 1, 2, 3 கண்டங்களில் ஸம்வர்க்க வித்யை என்று ஒரு பரவித்யை சொல்லப் படுகிறது. அந்த வித்யை ந்ருஸிம்ஹனைப் பரமாத்மா வென்று சொல்லுகிறது. இந்த விஷயத்தை ஸ்ரீ தேசிகன் அப்படியே ஸாதித்திருக்கிறார். உபநிஷத் பாஷ்யகாரர் ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமியும் அப்படியே வ்யாக்யாநம் செய்திருக் கிறார். அந்த வித்யை யாருக்கு யாரால் உபதேசிக்கப்பட்டு வெளிவந்த தென்கிற விஷயம் அங்குள்ள கதையினால் சொல்லப்படுகிறது. மஹா வ்ருஷம் என்று ஒரு தேச முள்ளது. அதில் ஜாநச்ருதி என்ற தார்மிகரான ஓர் அரசர் இருந்தார். அவர் ஸமீபத்திலுள்ள நாடு நகரங்களில் பறையறைவித்துக் கொடிகள் கட்டி, அந்நம் வஸ்த்ரம் போர்வை படுக்கை முதலியவைகளை வேண்டினவர்களுக்கு அன்புடன் அளித்து வந்தார். ஆனால் அவர் ப்ரஹ்ம வித்யை என்பதையே அறியார். செய்திருக்கும் அளவற்ற தர்மத்திற்குப் பல மாக அவருக்கு ப்ரஹ்ம வித்யையைக் கொடுக்க எண்ணங் கொண்ட இரண்டு தேவர்கள் அன்னப்பறவை ரூபத்துடன் அவர் மாளிகைக்கு நேரில் உயரப் பறந்து வந்தனர். அதில் ஒரு அன்னம் மற்றொன்றைப் பார்த்து, "தோழனே! அங்குப் போகாதே; மாடியில் பரம தார்மிகரான ஜாநச்ருதி என்கிற அரசர் படுத்திருக்கிறார். அவருடைய தேஜஸ் உயரப்பரவியிருக்

கிறது; என் ப்ரிய ஸுஹ்ருத்தான உன்னை எரித்துவிடும்" என்று சொல்லிற்று. அதைக் கேட்ட அந்த அன்னம் நகைத்துவிட்டு, "இவர் கேவலம் தார்மிகர் தானே! ரைக்வ ரிஷியைப்போல் ப்ரஹ்மஜ்ஞரல்லவே! இவருக்கு தேஜஸ் இல்லை" என்றது. விழித்துக்கொண்டிருந்த அந்த அரசன் இதைக் கேட்டு, அந்த இரவை ஓர் ஊழிபோல் கழித்து, விடிந்தவாறே தன் அங்கப்புரக் காவலரான க்ஷத்தாவைக் கூப்பிட்டு எங்கும் போய் ரைக்வ ரிஷி இருக்குமிடத்தைத் தேடிவரும்படி நியமித்தார். அந்த க்ஷத்தாவும் நாடு நகரங்களெல்லாம் தேடிவிட்டுக் காணவில்லை யென்றார். அரசரும் அதிக கவலை யுள்ளவராதலால், 'யோகிகள் வனத்தில்தான் இருப்பார்கள்; அங்குப் போய்த் தேடவேண்டும்' என்று நியமித்து மறுபடியும் க்ஷத்தாவை அனுப்பினார். க்ஷத்தாவும் தேடிச் சென்று ஒரு மரத்தடியில் பெரும் அரிப்புள்ள தேஹத்தை, உடைந்த ஒரு சகடையில் சொரிந்துகொண்டிருக்கு மொருவரைக் கண்டு அவர் அருகே சென்று, 'தாங்கள்தான் ரைக்வரோ?' என்று வினவினார். அதற்கு அந்த ரிஷியும் 'ஆம்' என்றார். உடனே க்ஷத்தா அரசனிடம் ஓடிவந்து தாம் கண்டதாகத் தெரிவித்தார். அரசரும் வெகு குதூஹலத்துடன் அநேக காணிக்கைகளுடன் அங்குச் சென்று தண்டனிட்டு, "மஹர்ஷியே! இவ்வளவு காணிக்கையுடன் வந்தேன். இவைகளை ஏற்று அடியேனுக்குத் தேவரீர் உபாஸிக்கும் பரதேவதையையும் அதை உபாஸிக்கும் ப்ரகாரத்தையும் உபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். ரிஷியும், "கேவல தார்மிகனாய் ப்ரஹ்ம ஜ்ஞான மில்லாததினால் சோகிப்பவனே! இதெல்லாம் உனக்கே இருக்கட்டும்; எனக்கு வேண்டாம் போ" என்றார். பெரியோர்கள் பொருளுக்காக ஒரு தடவையில் ப்ரஹ்ம ஜ்ஞானத்தை உபதேசிக்கமாட்டார்களன்றோ? அதனால் முனிவர், 'பொருள் உனக்குப் பெரிது; எனக்கில்லை' யென்று சொல்லிவிட்டார். இங்கு உடையவர் திருக்கோட்டியூர் நம்பியிடம் நடந்த கதையை அநுஸந்திக்கவும். சிரகாலாநுவர்த்தந மின்றி ப்ரம்ஹ வித்யை ப்ரதிஷ்டித மாகாது. அரசரும் காணிக்கை போதாததாக நினைத்துத் தன் பெண்ணையும் அவளுள்ள விடத்தையும் முன்போல் காணிக்கைகளையும் ஸமர்ப்பித்து மறுபடியும் போய் வருந்திக் கேட்டார். அந்த ரிஷியும் உத்தமமான பாத்ரத்தில் ஜ்ஞானத்தை வைத்துவிட்டே இறக்கவேண்டு மாதலால் ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அவ்விடத்திலுள்ள வாக்யங்களாவன :—

"கோ₃ப்தா தே₃வாநாம் ஜநிதா ப்ரஜாநாம் ஹிரண்யத₃ம்ஷ்ட்ரோ ப₃ப₄ஸோ(அ)நஸூரி: மஹாந்தமஸ்ய மஹிமாநமாஹு: அநத்₃யமாநோ யத₃நந்நமத்தி".

இங்கு 'கோ₃ப்தா தே₃வாநாம்' என்று ஸர்வருக்கும் அந்தர்யாமியாய் ஸர்வ ஸ்திதி ஹேது என்கிறது. 'ஜநிதா ப்ரஜாநாம்' என்று ஸர்வ ஸ்ரஷ்ட்ருத்வம் சொல்லப்படுகிறது. 'ப₃ப₄ஸ:' என்று ஸர்வ ஸம்ஹர்த்தா வென்கிறது. 'மஹாந்தமஸ்ய மஹிமாநமாஹு:' என்பதால், மூன்று வேதங்களுக்கு ஒரே முகமான புருஷ ஸூக்த ப்ரதிபாத்யரு மிவரே என்கிறது. 'ஹிரண்யத₃ம்ஷ்ட்ர:' என்றதால், ஹிரண்யனைப் பிளந்த அல்லது அழகான பற்களை யுடையவன் என்கிறது. 'அநஸூரி:' என்பதால் ஸர்வஜ்ஞன் என்கிறது. இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லய கர்த்ருத்வம் ப்ரஹ்ம ஸூத்ரம் இரண்டாவது ஸூத்ரத்தில் வ்யாஸ பகவான் சொன்ன ப்ரஹ்ம லக்ஷணம். ஸ்வரூப நிரூபகமான ஜ்ஞாநாதி

களான ஆறு குணங்கள் உள்ளவர் என்று ஏற்பட்டது. இவ்விடத்தில் உபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமியும் 'அஸ்ய ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்ய பராக்ரமஸ்ய...' என்று ஸாதித்திருப்பதைப் பார்க்கலாம். இப்படி மற்றுமோர் அவதாரத்திற்குக் கிடையாது.

ஆழ்வானும் வரதராஜ ஸ்தவத்தில் '[illegible]' என்றார். அந்த ஸ்தவம் ப்ரஹ்லாத வரதனுக்கும் ஹஸ்திகிரி வரதனுக்கும் பொது என்று பெரியோர் பணிப்பர். ஸ்ரீ பாகவதத்தில் '[illegible]' என்று ஸர்வாந்தர்யாமித்வத்தை ஸ்ரீ சுக ப்ரஹ்மர்ஷி நன்றாய் ஸாதித்தார். '[illegible]......[illegible]' என்றும் ஸ்ரீ நரஸிம்ஹன் ஸர்வாந்தர்யாமி யெனப்பட்டார். ஸ்ரீ தேசிகனும் '[illegible]' என்றருளிச்செய்தார். ஆழ்வான் ஸுந்தர பாஹு ஸ்தவத்தில் '[illegible]' என்றார். இதுவும் நரஸிம்ஹ விஷயமாகக் குறையில்லை.

இங்கு ரஹஸ்யம் என்று சொன்னதை ஸ்ரீ தேசிகனும் '[illegible]' என்று வ்யாக்யாநம் பண்ணியருளினர். ஸங்கர்ஷண காண்டம் கடைசியில் '[illegible]' என்று சொன்னதை அநுவதித்து உத்தரமீமாம்ஸையான ப்ரஹ்ம ஸூத்ரத்தில் அந்த ப்ரஹ்மத்திற்கு 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரத்தினால் லக்ஷணம் சொல்லப்பட்டது. 'விஷ்லு வ்யாப்தௌ' என்கிற தாதுவிலிருந்து விஷ்ணு சப்தம் ஏற்பட்டது. ஆகையால் விஷ்ணு சப்தம் நரஸிம்ஹனைச் சொல்லுகிறது. அவர் மந்த்ரத்திலும் விஷ்ணு சப்தம் காணப்படுகிறது. தாபநீயோபநிஷத்து முழுவதும் நரஸிம்ஹனையே பரதேவதையாகச் சொல்லுவதுடன், இவரை ஆச்ரயிப்பவருக்கே மோக்ஷஸித்தி என்றும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லுகிறது '[illegible]' என்ற விடத்தில் இருக்கும் ஏவகாரம். இந்தத் தாபநீயம் என்கிற உபநிஷத்து ஆழ்வான் தேசிகன் முதலியவர்கள் ஸ்ரீ ஸூக்தி மூலமாய் ஒப்புக்கொண்ட ப்ராசீந உபநிஷத்து. ஆக, பரப்ரஹ்ம லக்ஷணங்களுடன் உபநிஷத் வேத்யராய் உள்ளவர் ந்ருஸிம்ஹனே என்று ஏற்பட்டது.

வ்யூஹம்—ஸங்கர்ஷணரும் விஷ்ணுவு மிவரேயாக அநேக ஸம்ஹிதைகளில் சொல்லுகிறபடியால் ஸித்தம். விபவம்—ப்ரக்ருதி மண்டலத்தில் ஸர்வருக்கும் காணலாம்படியாய் அவதரித்ததனால் ஸித்தம். அந்தர்யாமித்வம் கீழே நிரூபிக்கப்பட்டது. அர்ச்சை—அஹோபிலம் ஸிம்ஹாசலம் முதலிய இடங்களில் எழுந்தருளி யிருப்பதால் ஸித்தம். ஸ்ரீ பாகவதம் 11-வது ஸ்கந்தத்தில்

"[illegible] ।
[illegible] ॥"

என்று சொல்லியபடி அங்கங்கே பல ஸ்வரூபமாய் எழுந்தருளியிருக்கிறார். தைத்திரீயோபநிஷத்தில் 38-க்குமேல் ஆறு அநுவாகங்கள் ந்ருஸிம்ஹனையே சொல்லுகின்றன வென்று ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி பாஷ்யம்.

ஸ்ரீரங்கநாதன் பத்து ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பெற்றவர்; திரு வேங்கடமுடையான் ஒன்பது ஆழ்வார்கள் பாடல் பெற்றவர்; ஆராவமுதன் ஆறு ஆழ்வார்கள் பாடல் பெற்றவர் என்று பெரியோர் பேச்சு. ந்ருஸிம்ஹனே 12-ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பெற்றவர். திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களிலும் ஆழ்வார்கள் எல்லாரும் ந்ருஸிம்ஹனைப் பாடியிருக்கிறார்கள். மேலும் 'நம்மாழ்வார் பரிஸாத்தில் இரட்டை விநியோகம் வாங்கின மூன்று எம்பெருமான்களில் ந்ருஸிம்ஹன் ஒருவர்' என்று அடியேன் முத்தண்ணா ஸாதிக்கும் ஆப்துக்தி.

மோக்ஷ தர்மம் 47-வது அத்யாயத்தில், சக்ரவர்த்தித் திருமகன் பிராட்டியுடனும் இளைய பெருமாளுடனும் அஹோபிலம் வந்து பஞ்சாம்ருத ஸ்தோத்ரத்தினால் ந்ருஸிம்ஹனை ஆராதித்ததாகச் சொல்லியிருக்கிறது. கீழஹோபிலத்தில் அப்படியே காணப்படுகிறது. அந்த பஞ்சாம்ருத ஸ்தோத்ரத்தைப் பெரியோர்கள் தினமும் அநுஸந்தித்து வருகிறார்கள். மேலும் திருவேங்கடமுடையான் ஆகாச ராஜாவின் பெண்ணான அலர்மேல்மங்கைத் தாயாரை மணம் செய்து கொடுக்கும்படி அரசனைக்கேட்க, 45-நாள் லக்ஷ ப்ராஹ்மண போஜநம் செய்து வைக்கவேணு மென்றும், ஒருநாள் அமுது செய்த ப்ராஹ்மணன் வேறொரு நாள் கணக்கில் இல்லாமலிருக்கவேணுமென்றும் அரசன் விதிக்க, திருவேங்கடமுடையானும் அப்படியே செய்வதாய் அங்கீகரித்து, 'பஹவ, என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட ந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்க, ந்ருஸிம்ஹனும் 'அப்படியே செய்வோம்' என்று சொல்லி, அரசன் சொல்லியபடியே லக்ஷ ப்ராஹ்மணராய் வந்து புஜித்து மணத்தை முடித்து வைத்தார். இது விஷயம் புராணங்களிலும் கீழஹோபிலத்திலும் காணலாம். ஆகையால் இவர் இரண்டு பெருமாள் ஆராதித்த பெரிய பெருமாள். ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை மஹா ஸ்வாமி என்றுதான் வ்யவஹரிப்பது வழக்கமாம். பாத்ம ஸம்ஹிதை சர்யாபாதத்தில் 27-வது அத்யாயத்தில் (29-வது ச்லோகத்தில்) '[illegible] ॥' என்று சொல்லப்பட்டது. ருத்ரன் பதத்துக்கு ஒரு வ்யாக்யாந ச்லோகம் செய்த மந்த்ர ராஜனை ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில் கொண்டாடி யுள்ளார். அதனால் ஸர்வ சேஷியும் இவரே. வராஹ புராணத்தில் நரஸிம்ஹன் திவ்யாவதாரம் எனப்பட்டது. ந்ருஸிம்ஹனே ஆதிசங்கராசார்யருக்குப் பரகாய ப்ரவேச காலத்தில் எரிந்துபோன கையை அளித்தார். 'ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்', என்று அவரும் ஸ்துதி செய்து இஷ்டம் பெற்றார். உதிதிக்ஷ. மேலும் மசக்கப்பரல் என்று ஈட்டில் சொல்லப் படுகிறவரும், தானே ஈசன் என்று நினைத்திருப்பவருமான ப்ரஹ்ம ருத்ரர்கள் ந்ருஸிம்ஹனுக்கு ஆராதகர் என்று திருமங்கையாழ்வார் 'நான்முகனு மீசனுமாய் முறையா லேத்த' என்று அருளிச் செய்தார். மேல் அஹோபிலத்தில் நரஸிம்ஹன் ஆலயத்தில் அர்த்த மண்டப ஸமீபத்தில் இன்றைக்கும் இருக்கிற லிங்கத்தைக் 'கோவிலுக்கு அப்புறத்தில் கோயில் கட்டி ப்ரதிஷ்டை செய்து விடுவோம்' என்று எற்கனவே 40-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திரு

வுள்ளம் பற்றியிருக்கையில், ஒரு வண்டிக்காரன் பேரில் ஆவேசம் வந்து, 'நான் ஆராதகன், இங்குத்தா னிருப்பேன்' என்று ருத்ரன் சொன்னார். இது அந்த ஸமயம் திருப்ரதிஷ்டைக்காக வந்திருந்த அடியேன் முதலிய ஆயிரம் ஜனங்கள் நேரில் அநுபவித்த விஷயம். இதனால், 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' என்கிற ச்ருதியின் பொருளும் இவரே என்றதாயிற்று.

ஆகவே: இக்கலியுகத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஆச்ரயிப்பவர்கள், ஐஹிகம் ஆமுஷ்மிகம் மோக்ஷ மளவாகப் பெறுவார்க ளென்பது ஸத்யம். 'எங்குமுளன்' என்கிற நம்மாழ்வார் பாசுரத்திற்கு ரஸமான எண்பது அர்த்தங்கள் உண்டு; அதை வேறு ஸமயம் விசாரிப்போம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்கிற சாஸ்த்ர த்ருஷ்டியான ப்ரஹ்மாபேத தர்சநம் விச்வத்திற்கு உயிர் தன் உயிருமாய் இருப்பதின் ஸாக்ஷாத்காரத்தால் வரும் விசிஷ்டைக்ய தர்சந மென்பதையும் விளக்குகிறார். அர்ஜுநன் விச்ரூப ஸாக்ஷாத்காராநுக்ரஹம் கிடைத்த க்ஷணத்தில், 'லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந்' என்று ஈடுபட்டபடி இவரும் மயர்வற மதிநல மருளப்பெற்றதால் விச்வத்திற்கு முயிராய் விச்வ ரூபனாய் ஸாக்ஷாத்காரம் பெறுகையில் 'எதிர் நிகழ் கழிவினு மினனிலன்' என்று கால த்ரயத்திலும் 'இனனிலன்,' 'அப்ரதிம ப்ரபாவன்' என்று ஈடுபடுகிறார். இவருக்குக் கால த்ரயமும் வர்த்தமாநம் போல் வந்துவிட்டது. 'வெஶ்வாவெத்ராக' என்று இந்தத் திருவாய்மொழியின் 7-வது பாசுரத்தை ரத்நாவளி ஸங்க்ரஹித்ததும் ஆழ்வாருக்கு ஸாக்ஷாத்கார மருளப்பட்ட விச்வ ஶரீரியின் அநுபவத்தை விளக்குகிறது. 'மிகுநரை யிலனே' என்று இங்கே இந்த விச்வரூபக் காட்சியில் இன்புற்றுப் பாடுவதும், 'ந த்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோऽந்ய:' என்று அர்ஜுநனுடைய விச்வரூப ஸாக்ஷாத்கார ஸமயோக்தியை அநுஸரித்தது. 'இனனிலன்' என்பது 'த்வத்ஸமோ நாஸ்தி' என்பதற்குத் தமிழாகும். 'அப்யதிக: குதோऽந்ய:' என்பதற்கு 'மிகுநரை யிலனே' என்பது தமிழாகும். 'ஜ்யாயாந்' என்பது நிரவதிக மான ஜ்யாயஸ்த்வத்தைக் காட்டுவது.

இங்கே எட்டாவதான ஆகாஶாதிகரண வாக்யத்தில் அந்தராதித்ய வித்யைக்கு அடுத்தாற்போல் ஜகத்காரணமாகச் சொல்லப்படும் ஆகாஶத்தின் ஜ்யாயஸ்த்வத்தை 'ஆகாஶோ ஹ்யேவைப்யோ ஜ்யாயாந் ஆகாஶ: பராயணம்' என்று பணிக்கப்பட்டது. அந்த அதிகரண பாஷ்யத்தில், 'ஜ்யாயாந்' என்பது ஸர்வஸ்மாத் ஜ்யாயஸ்த்வத்தையும், 'பராயண' மென்பது சேதநர்களுக்குப் பரம ப்ராப்யத்வத்தையும் சொல்வதால், 'இந்தக் காரணாகாஶமானது பூதாகாஶ

மல்ல; எங்கும் ப்ரகாசித்துக்கொண்டும் எல்லாவற்றையும் ப்ரகாசப்படுத்திக் கொண்டு மிருக்கும் ப்ரஹ்மமே' என்று ஸாதிக்கப்பட்டது. 'ஸவஷாச ஜ்யாயஸ்' என்பது ஸர்வ கல்யாண குணங்களின் ஸம்பத்தியால் ஸர்வத்தைக் காட்டிலும் ஸாதிசயமான உத்கர்ஷம் என்று அங்கே ஸ்ரீ பாஷ்யம். 'என துயிர்' என்று இங்கே உள்ளதும் அடுத்த அதிகரணமான ப்ராணாதிகரணத்தையும் அதன் விஷய வாக்யத்தையும் ஸூசிப்பதாகும். 'ஸர்வ ப்ராணிகளையும் ப்ராணவத்தாய்ச் செய்வதால், பரப்ரஹ்மமே ப்ராண சப்தத்தால் இங்கே காரணமாகக் கூறப்படுகிறது' என்று அங்கே ஸ்ரீ பாஷ்யம்.

'எதிர்நிகழ் கழிவினு மினனிலன் மிகுநரை யிலனே' என்பது "அதோ ஜ்யாயாம் ஶ்ச பூருஷ: । பாதோஸ்ய விஶ்வா பூதாநி । த்ரி । பாதஸ்யாம்ருதம் திவி' என்று புருஷஸூக்த ச்ருதிபோல் சாந்தோக்யத்தில் ஜ்யோதிர் வாக்யத்திற்கு முன் வாக்யமான காயத்ரீ வாக்யத்தில், 'தாவாநஸ்ய மஹிமா, ததோ ஜ்யாயாம் ஶ்ச பூருஷ:' என்று படித்துவிட்டு, 'யத: பரோ திவோ ஜ்யோதி தீப்யதே விஶ்வத: ப்ருஷ்டேஷு' என்று த்ரிபாத் விபூதியில் தீப்தமாயிருக்கும் இன்பச் சுடரை வர்ணித்ததையும் இங்கே ஸூசிக்கிறார். 'ஒழிவிலன் பரந்த வந் நலனுடை யொருவனை' என்று அடுத்த பாசுரத்தில் அந்த ஜ்யோதிரதிகரணத்தையும் அதன் விஷய வாக்யத்தையும் ஸ்பஷ்டமாய்க் குறிக்கிறார். 'எனதுயிர்' என்பதால் அதற்கடுத்த இந்த்ர ப்ராணாதிகரண ப்ரதர்தந வித்யையையும், அதற்கடுத்த ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாதிகரண விஷயமான சாண்டில்ய வித்யையையும் ஸூசிக்கிறார்.

'மிகுநரை யிலனே' என்பது 'பரோவரீயாநு' என்பதற்குப் பொருளாகும். 'வரீயஸாசவி பர:' என்று அதற்குப் பொருள். அது காரணமான ஆகாசத்தைப்பற்றிய ஆகாசாதிகரண வாக்யத்தி லுள்ளது. 'மிகுநரை யிலனே' என்பதால் மூன்றும் அத்யாயத்தின் இரண்டாம் பாதத்தில் 'பரம் அத:' என்கிற பராதிகரணத்தையும் ஸூசிக்கிறார். இங்கே இப்பாசுரத்திலும் அடுத்த பாசுரத்திலும் மூர்த்தாமூர்த்தரூப வாக்யத்தையும் அதிலுள்ள 'நேதிநேதி' வாக்யத்தையும், அதை விசாரிக்கும் உபயலிங்காதிகரணத்தையும், பொருள் விளக்கம் செய்வதும் ஸ்பஷ்டம்.

'எதிர்நிகழ் கழிவினு மினனிலன்' என்பதற்கு, 'எல்லாவற்றைக்காட்டிலும் விலக்ஷணமான ஸ்வரூப ப்ரபாவங்களை யுடையவன்; ஸத்ருச ரஹிதன்; இவனைக்காட்டிலும் உத்க்ருஷ்டமான அந்யவஸ்து ரஹிதன்' என்று பொருள். 'அதாத ஆதேஶோ நேதி நேதி நஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி' என்கிற ச்ருதி வாக்யத்திற்கு இது தமிழாகும். 'அந்யத்பரம் நாஸ்தி' என்பதற்கு உத்க்ருஷ்டமான வேறு பொருள் இல்லை யென்பது பொருளே தவிர, இரண்டாவது பொருளே சூந்ய மென்கிற பொருளல்ல வென்கிற ஸித்தாந்தப் பொருளை விளக்குகிறார். 'அந்யத்பரம்' என்று சொல்லுமிடத்தில், பரம் என்பதற்கு 'மிகுநர்', உத்க்ருஷ்டர்' என்று பொருள் என்னும் ஸூக்ஷ்மத்தை விளக்குகிறார். 'நேதி நேதி' என்ற விடத்தில் 'இப்படியல்ல இப்படியல்ல' என்று

பொருளே யொழிய, 'இது இல்லை இது இல்லை, ஒன்றுமில்லை' என்கிற பொருளல்ல வென்கிறதையும் 'இன னிலன்' என்பதால் விளக்குகிறார்.

முதல் பாசுரத்தின் கடை யடியில் 'அவன் சுடரடி தொழுதெழு' என்று கூறி யிருப்பதை ஒவ்வொரு பாசுரத்தின் முடிவிலும் அன்வயித்துக்கொள்ள வேண்டியதென்று திருவாறாயிரம் முதலிய வ்யாக்யாநங்கள் காட்டியுள்ளன. விச்வரூபக் காட்சி கிடைத்த உடனே அர்ஜுநன்,

"𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑌿 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 ।
𑌨𑌮𑌃 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑌥 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍇 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵 ॥"

என்று திரும்பவும் திரும்பவும் 'நம:' என்று உச்சரித்துக்கொண்டு நமஸ்கரித்ததுபோல், இங்கும் விச்வரூபக் காட்சி பெற்றதும் அநுபவ ஸம்ப்ரமம். அங்கே 'ஓ ஸர்வனே! எல்லாப் பொருளு மானவனே! என்று கூப்பிட்டு நமஸ்கரித்ததுபோல், இங்கும் அவன் எல்லாப் பொருள்களுமாய் இருப்பவனென்று திரும்பவும் திரும்பவும் பாடிக்கொண்டு மாறன் பரன் திருவடி தொழும் அநுபவம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

இராமானுசன் இன்னருள்

[ஸ்ரீ. உ.ப. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், சென்னை]

"𑌸 𑌜𑌯𑌤𑌿 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌮𑍁𑌨𑌿𑌃 𑌕𑌰𑍁𑌣𑌾𑌜𑌲𑌧𑌿𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌸𑌃 ।
𑌹𑌰𑌿𑌶𑍈𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍇𑌵𑌃 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑌶𑍀𑌕𑌯𑌦𑌵𑌿𑌕𑌦𑍈𑌤𑍍𑌰𑍋𑌯𑍈𑌃 ॥"

எம்பெருமானுக்குப் போலே எம்பெருமானாருக்கும் ஸ்வரூப ரூப குணங்களைப் பரக்கப் பேசும் ஓர் உபய வேதாந்த முண்டு. அங்கே பழமறை முற்பட்டுத் தமிழ்மறை (காலத்தால்) பிற்பட்டது. எம்பெருமானார் விஷயத்தில் தமிழ் முற்பட்டது. திருவரங்கத் தமுதனார் அருளிய இராமானுச நூற்றந்தாதி தமிழ் மறை; ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிய யதிராஜ ஸப்ததி வடமொழி வேதாந்தம். எம்பெருமானை ப்ரதிபாதிக்கும் இரண்டு மறைகளையும் ஐககண்ட்யம் செய்வதற்குப் பூர்வர்கள் பெரும்பாடு படவேண்டி யிருந்தது. இங்கே எம்பெருமானார் விஷயத்தில் இருமறைகளும் ஒரு முகமாகப் பேசுவதால், அறிவிலிகளும் கண்டு அநுபவிக்கக் கூடிய ஒற்றுமை நேரில் விளங்குகிறது.

"𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌲𑍋𑌕𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑍁𑌷𑍁𑌵𑍇 𑌯𑌂 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑍀"

என்ற பிராட்டி பாசுரத்தின்படி, உலக மனைத்தையும் வாழ்விக்கத் தோன்றியவன் இராமன். அப்படியே தான் அனைத்துலகும் வாழப்பிறந்த இராமானுச மாமுனிவன் அவதாரமும். இராமாவதாரத்தில் கருணையே ப்ரதாநமான பெருமாள் குணம். இராமாநுசாவதாரத்திலும் கருணையே தான் இவ்வாசார்ய

ச்ரேஷ்டரின் ஒப்புயர்வற்ற குணம். இதற்கு அமுதனாரும் தேசிகனும் தோற்றமையை அநுபவிக்கச் சற்று முற்படுவோம்.

"காரேய் கருணை யிராமா நுசவிக் கடலிடத்தில்
ஆரே யறிபவர் நின்னருளின் தன்மை?" (25)

என்று முதன் முன்னம் ராமாநுஜ தயா பாத்ரரான அமுதனாரே கையறு நிலை எய்துகின்றாரென்றால், அவ்வருளின் வண்ணத்தை வேறுயார் எப்படிப் பேசுவது? 'நின்னருளின் வண்ணம் நோக்கில் தெரிவரிதால்' என்பதும் அமுதனார் அருளிச் செயலே. இப்படியே அருள் விஷயமாய்ப் பல பாசுரங்களில் அநுபவம் பெருகி ஓடுகிறது. அவ்விடங்களி லெல்லாம் பெரும்பாலும் தம்மையிட்டு அவ்வருளை அளவிட்டுப் பார்த்து விஸ்மிதராகிறார். ஓரிடத்தில் மட்டும் பெருமாளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார். பார்த்ததில், அருள் விஷயத்தில் பெருமாள் பிற்பாடராய் விட்டாரென்றே முடிவு கட்டுகிறார்.

"சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து முன்னாள்
அந்தமுற் றாழ்ந்தது கண்டு அவையென் றனக் கன்றருளால்
தந்தவரங்கனும் தன் சரண் தந்திலன் தானதுதந்து
எந்தை யிராமாநுசன் வந்தெடுத்தன னின்றென்னையே"—(69)

அருளாலே உலகை ஸ்ருஷ்டித்துச் சேதநர்களுக்குக் கரணகளேபர ப்ரதாநம் செய்தருளிய பெருமாளும் கரண விஷயத்தில் உதாரனான போதிலும், தன் சரண விஷயத்தில் லோபியாகவே காணும்படி அச்சரணங்களை அனைவர்க்கும் வழங்கும் அருள் இராமாநுசனிடத்தே தங்கியதென்று பேசி ஹ்ருஷ்டராகிறார். இது பெருமாளை அளவு கோலாக்கி, அது கொண்டு இராமாநுசனின் இன்னருளை அளந்தபடி.

ஸ்வாமி தேசிகனும் அமுதனாரது இவ்வநுபவத்தையே வெகு ரஸமாகக் கையாள்வதைக் காண்கிறோம். யதிராஜ ஸப்ததியில் முக்யமாக இரண்டு ச்லோகங்கள் இவ்விஷயத்தை ப்ரதிபாதிக்கின்றன. அருளாளனென்று அஸாதாரணமான பெயர் பூண்டு, அருளையே தமக்கு நிரூபகமாகக் கொண்ட எம்பெருமானைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யகாரருடைய அருளை அளவிட்டுப் பார்க்கிறார். இன்று அவன் அருளாளனாக விளங்குவது, உடையவராகிய கருணா ஸமுத்ரத்திலிருந்து முகந்து கொண்டமையால்தான் என்று காட்டுகிறார்.

"உத்தம் யேந தயாஸுதாம்புநிதிநா வீக்ஷா விஸ்ருஷ்டம் பய:
காலே ந: கலிகோபமுக்த க்ருஷ்ண ஜலத: காருண்யிகம் வர்ஷதி ॥"

உடையவரை ஸமுத்ரத்துக்கும் வரதனை மேகத்துக்கும் ஒப்பிடுகிறார். ஸாமாந்ய ஸமுத்ரத்தை ஒதுக்கப் பல அடைமொழிகள். இது உவர்க் கடலல்ல; அமுதக் கடல். அதிலும் அருளமுதக் கடல். தயா ஸுதாம்பு நிதியாம். இது, கவி ஸார்வபௌமனது ஒரு விசித்ர ஸ்ருஷ்டி. அப்படிப்பட்ட அருளமுதக் கடலினின்று ஸமர்ப்பிக்கப்பட்ட நீரை உண்டு, இலங்கொலி நீர்ப் பெரும் பௌவம் மண்டி யுண்ட பெருவயிற்ற கரு முகிலாகிறார் கரிசைலக் க்ருஷ்ண மேகம்.

18927

மேகங்கள் மலையிடத்தே தங்குவ தென்பது இயற்கை வர்ணனை. இம் மேக மும் கரிசைலத்தில் தங்கியது. அங்கிருந்து வர்ஷிக்கிறது அருளை வேண்டுவார் வேண்டுகோளுக் கதிகமாக. இங்கே ஒரு ஸந்தேஹம் உதிக்கலாம். 'இப்படி ஆசார்யனைப் புகழ்வதற்காக எம்பெருமானைத் தாழ்த்திப் பேசுவது யுக்தமா?' என்று. சற்று ஊன்றிப் பார்த்தால் உண்மை விளங்கும். இயற்கையை மறுபடி கவனிப்போம். கம்பன் கவி பாடுகிறான் பின் வருமாறு:—

"பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம் போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்"

மழை பெய்கிறது. வெள்ளம் பெருகுகிறது. ஆறுகள் நிரம்பிச் சுழித்து வெள்ளமிட்டோடி ஸமுத்ரத்தில் புகுகின்றன. அந்த ஸமுத்ரத்தினின்று மறு படி மேகங்கள் கிளம்புகின்றன. அவைகள் மழையாகப் பொழிகின்றன. மறுபடி கடல் புகுவன அந்நீர்கள். இப்படி ஒரு முடிவில்லாத சக்ரம்போல் மாறிமாறி வந்து ஒன்று ஒன்றுக்கு ஹேதுவாவது போல் காண்கிறோம் இயற் கையில். அவ்வண்ணமேதான் இந்தத் தயா ஸுதாம்புநிதியும் க்ருஷ்ண மேக மும். ஆதியில் அருளாள னருளுக்குப் பாத்ரராகி, அது தன்னிடத்தில் நிரம்பிய தால், உடையவர் அருட்கடலாக விளங்குகிறார். அவரது அருள் நீரைப் பருகி அருளாளன் முத்திமழை பொழியும் முகிலாக ப்ரகாசிக்கிறார். இக்கடலாலும் மேகத்தாலும் உயர்ந்த க்ஷேமத்தையும் பரம லாபத்தையும் பெறுவன சேதந வர்க்கங்கள். ஸ்வாமி தேசிகனுடைய இந்த உயர்ந்த உத்ப்ரேக்ஷையை ஒவ் வொருவரும் உள்ளத்திலிட்டு அநுபவிக்க வேண்டும். இது கவிதா ஸாமர் த்யமா? ஐதிஹ்யப் பாராட்டா? ஸம்ப்ரதாய ஜ்ஞாநமா? அனைத்தும் ஒருங்கே குடி கொண்ட ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி யென்றுதான் சொல்லலாம்.

திருவரங்கத் தமுதனார் அரங்கநகரப்பனை உலோபி யென்று காட்டின தும், ஸ்ரீ தேசிகன் தமது பெருமாளான அருளாளனை ராமாநுஜ தயாபாத்ர மாகப் பேசினதும் கண்டோம். இதற்கு மேலும் ஒரு சித்ரவேலையைச் செய்து காட்டியிருக்கிறார் தேசிகர் பெருமான்.

யதிராஜ ஸப்ததியின் 60-ஆவது ச்லோகம் யதிபதி தயையைப் பாராட் டுவது. அதை ஒரு கங்கா ப்ரவாஹமாக வைத்து ச்லேஷாலங்காரமாக அமைந்துள்ள ச்லோகம் இது. இதன் அழகுகள் அளவிறந்தன. இங்கே அநுஸந்தேயம் ஓரம்சம்.

"ஸரித் ஸூக்தாநாம் ஸகலஜநஹர்ஷைகஜநநீ
ஹரீயோ ஹிம்ஸ்ரோத்ரே: ப்ரஸவதி தயா ஸாரஸரஸ: ।
நிரஸ்த்யோத்தா நித்யஸ்ருதரவி ஸம்ஸாரபவயதி ஸதாம்
யதஸ்த்ஸ்நாவிக்ஷேபாத் த்ரிவ திஷயாதிவ்ய ததிநீ"

எம்பெருமானாரது தயைக்கு ஏற்பட்ட இப்பாசுரத்தை எண்ணும்போது எம் பெருமானது தயைக்கு ஒரு ப்ரபந்தமே செய்தருளிய இவ்வாசார்ய வள்ள லது தயாசதகம் ஞாபகத்துக்கு வருவது இயல்பே. அங்கே திகழக் கிடக் கிறது ஒரு ச்லோகம்.

"வஹாஶாஸ-வாநு வடெ ஹஹீஸய நயெ ஷூி தாநு ।
கஊஶூாகாஞகாஸ-ணஹ்ஹ ஹஜூா ஷூாவி தஊஷியாநு ॥"

இரண்டு ச்லோகார்த்தங்களையும் உற்று நோக்குங்கால் கவிக்குப் பெருமாள் தயையைக் காட்டிலும் ஆசார்ய தயையிலிருக்கும் கௌரவபுத்தி நன்கு வெளியாகிறது. பெருமாள் தயை நம்மளவில் ப்ரஸரிக்க வேண்டுமானல் பராசர ப்ரஹ்ம ரிஷிபோன்ற மஹான்கள் பகீரத ப்ரயத்நம் செய்யவேண்டியிருக்கிறது. யதிபதியின் கருணு ப்ரவாஹமோ, நாம் எவ்வளவு மேட்டிலிருந்தாலும், நம்மைத் தனது யத்ருச்சையாக ஏற்படும் தெளிப்பினுல் நனைத்து முழுக்காட்டி விடுகிறது. காரணவிசேஷம் இன்ன தென்று அறுதியிட அரிதாயிருப்பதொரு ஆசார்ய கடாக்ஷம்தான் இங்கே 'யத்ருச்சா' சப்தத்தால் நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிறதெனக் கொள்ளல் வேண்டும். அலைகள் வெகு வேகமாகக் கிளம்பிவந்து ஒன்ருேடொன்று மோதும்போது நீர்த்திவலைகள் வெகு உயரமாகப் போவதும், வெகுதூரம் வீசப்படுவதும் இயற்கையில் காணப்படுகிறது. இராமானுசனின் இன்னருள் அப்படி அலைவீசும் ஸுதாப்பு நிதி யல்லவா? அகிஞ்சநர்களை ஆட்கொள்வதி லுள்ள லாகவத்தைக் கண்டு வியந்து பாசுரமிட்ட அமுதனர் பாடல் இப்போது நன்கு வ்யாக்யானிக்கப்பட்டதாகிறது.

"காரேய் கருணையிராமானுச விக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின் தன்மை யல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான்வந்து நீயென்னை யுய்த்தபின்னுன்
சீரே யுயிர்க்குயிரா யடியேற் கின்று தித்திக்குமே."

அப்படியே நம் ஒவ்வொருவர்க்கும் தித்திக்குமாறு அமுதனரும் அருள்தருமாரண தேசிகனும் அருள்புரிவாராக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A., L.T.,
வித்வான், திருவையாறு]

ஸர்வேச்வரன் மாநவ ஜந்மத்திற்கு அத்யாச்சர்யமான ஹ்ருதயம் என்ற பொருளைப் பரம கருணையுடன் கொடுத்திருக்கிருன். இந்த ஹ்ருதயமே ஸர்வ நியந்தாவின் திவ்யாலயம். இந்த ஹ்ருதயமே சேதநனை நித்யாநந்தத்திலோ நித்ய துக்கத்திலோ ஆழ்த்தக்கூடிய அத்யத்புதமான ஸாதநம். சரீரம் மாத்ரம் மோக்ஷ ஸாதநமாக முடியாது. இப்பொழுது காயிகமான வ்யாபாரங்களால மாத்ரம் மநுஷ்யன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமா என்கிற சர்ச்சைக்கே அடியேன் போகவில்லை. காயிக வ்யாபாரங்களையும் ப்ரேரிப்பது

ஹ்ருதய மன்றோ ? ஹ்ருதயத்தில் இரண்டு உத்கட சக்திகள் வளருவதற்கு யோக்யதை இருக்கிறது. அவை: ப்ரேமம் த்வேஷம் என்பன. இயற்கைக்கு ஒத்தவாறு மனிதரின் நடவடிக்கை அமைவதானால், அந்த நடவடிக்கைகள் ஸாதுவாகக் கொண்டாடப்படுவதானல், உலகில் உபதேசம் தேவையில்லை; ஆசார்யர்கள் தேவையில்லை; ஞான ஸம்பாதநமும் தேவையில்லை. கொடிய ம்ருகங்கள்கூட அநுபவத்தினுல் சில இயற்கைகளை மாற்றவேண்டி வருகிறது. ஸ்நாநம், ஜபம், ஹோமம், முதலியவற்றை விதிக்கும் ஸத்க்ரந்தங்கள் ஹ்ருதய பாகத்தை உத்தமமாகவே சொல்லிப்போகின்றன. ஹ்ருதய பாகத்தை வற் புறுத்துபவர்கள் ஸ்நாந ஜபாதிகளை விட்டுவிட்டுச் சோம்பராய்த் தடித்துத் திரிய வேண்டுமென்று பேசவும் வரவில்லை.

இந்த ஹ்ருதயத்தினுல் செய்யும் அன்பு இருக்கின்றதே! அது எத் தகைய பாவனமான விஷயம்! இந்த அன்புதான் இந்த லோகத்தின் உஜ்ஜீவநம்; ஒளி; அருமருந்து; ஆதாரம். இந்த அன்பே ஸ்ருஷ்டிக்கு ஆதி ஹேது. உலகின் நிலைநிற்றலுக்குக் காரணம்; அழிவிற்கும் முக்யமான அடிப்படை. ப்ரளயம் எனப்படும் அழிவும் ஸர்வேச்வரனின் தயா கார்ய மல்லவா ?

மனிதன் தெய்வத்தன்மை யடைய இந்த அன்பே காரணம். மனிதன் உலகத்தின் துயரை ஒழித்து சாந்தியையும் ஸுகத்தையும் நிலை நாட்ட இந்த அன்பே காரணம். அவதாரங்கள் இந்த அன்பில்லாவிடில் ஏற்படுமா? நிலைக்குமா? தொடருமா? மனிதனுக்கு எப்பொழுது கேவலம் கர்மகலா பத்தில் ஆசை விழுந்ததோ, மனிதனுக்கு எப்பொழுது தயை பொறுமை பிறர் தொண்டு இவற்றின் ஆவச்யகதையில் புத்தி போகவில்லையோ, அப்பொழுது அவதாரங்கள் ஏற்பட்டு மனிதனின் ஹ்ருதயத்தைப் பாகம் செய்தன. பகவத் குண சேஷ்டிதங்கள், பாறையினுங் கொடிய அவனது உள்ளத்தைத் தவிடு பொடியாக்கி, நுண் மணலாக்கி, அதில் இரக்கம் அஹிம்ஸை என்னும் இனிய நீர்ப் பெருக்கைக் குழைத்து விலைபற்ற சேற்றுநில மாக்கி, அதில் தயை பக்தி அநுபவம் ஸஹ்ருதயதை ஸேவா த்யாகம் முதலிய அத்யத்புதமான மணம் பொருந்திய மலர்ச் செடிகளை எழுப்பி உள்ளத்தை ஓர் நந்தநவந மாக்கு கின்றன.

உடல் வலியினுலும் மனோவலியினுலும் உலகமெல்லாம் வாட்டி நடுங்கச் செய்த ராவணன், எல்லையற்ற வர பலத்தினுல் மதங்கொண்ட தான் தளர்வ தையும், துணையற்ற மனிதனுகிய ஸ்ரீராமபிரான் நாடோறும் பல மோங்கி நிற்பதையும் கண்டான். ஸத்யத்தை சத்ருவினிடம் கண்டான். தர்மம் அவரது கவசம் என்பதை உணர்ந்தான். தயை அவனது விதாநம் என்றறிந்தான் கடமை அவனது வாள் என்றும், க்ஷமை அவனது தாரகமென்றும் பார்த் தான். நிராயுதபாணியாய், ரதங்கள் குதிரைகள் மற்றும் துணைகளை இழந்து எதிரில் முகங் கவிழ்ந்து நின்ற தன்னைக் கண்டவுடன், ஒரே வெட்டாய் அவர் வெட்டியெறியவில்லையே என்று ஏமாற்ற மடைந்தான். ஏன் ? இவனுக்கு— முரட்டு சரீர பலத்தை நம்பிய இவனுக்கு—வேறு விதமான நடவடிக்கை அறிய

முடியாததாயிற்று. சத்ருவை—தன் ஆருயிர்க் காதலியை நாள்தோறும் சித்ரவதை செய்யும் கிராதகனைக்—கண்டு, அவனது தீனமான நிலையைப் பயன் படுத்திக்கொள்ள நினைப்பது மனித இயற்கை. ஸ்ரீராமபிரான் செய்ததென்ன? அப்படியே அங்கேயே அவன் நிலைக்கு இரங்கி, ‘இன்றுபோய் நாளை வா’ என்று அனுப்பினார். இந்தப் பெருந்தன்மை ராக்ஷஸ உள்ளத்தையும் உருக்குமல்லவா! பாறை உருகுவதுபோல் ராவணனின் க்ரூர ஹ்ருதயமும் கரைந்து ‘ஸௌத்ரா: ஹூவத்ராத வியஸனாத்’ என்று கதறச் செய்தது. மனிதனின் தாழ்ந்த இயற்கையைத் தெய்வ தத்வம் மாற்றித் தருகிறது. ஹ்ருதயத்தின் உயர்வினால் நரகம் ஸ்வர்க்கமாகும். பாலைவனம் பூஞ்சோலையாகும். அந்தகாரம் தேஜஸ் ஸங்கமாகும். ‘ஸ்வார்த்தாய ஹந்தம் ஸ்வகாத்ரம்பம் வதூயெக் ஜன:’; ‘தன்னைக் கொல்லவந்த பசுவையுங் கொல்லலாம்’ இவையெல்லாம் மனித இயற்கையை ஒத்துத் தன்னலத்தை வளர்த்துவரும் அசட்டுப் பழமொழிகள். ப்ராணன் போகிற காலத்தில் ‘உன்னைக் காத்துக்கொள்’ என்கிறது ஸமயோசித அறிவு. ஸ்வயநலம் அதை வற்புறுத்துகிறது. ‘ப்ராணனையும் கொடுத்துப் பிறரைக் காப்பாற்று’ என்கிறது தெய்வ உள்ளம் ‘நீ அழி; பிறர் வாழ்விற்கு நீ கருவியாக ஆகு’ என்கிறது தெய்வ நீதி. ‘ஆபெவா நமதா’ என்றும், ‘ஸஹதர்மசாரீ’ என்றும் கொண்டாடப்பெற்று, ராமனுடைய உயிராகி நின்ற ஜானகீ தேவியைப்பற்றி ஸ்ரீராமனுடைய அநுராகத்தை வர்ணிக்க வேண்டாம். ஆனால் ஸஹ்ருதத்துக்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்தால் ‘அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்............ என்றும், ‘த்வாம்வா ஸீதெ ஸலக்ஷ்மணாம்’ என்றும், பத்நீ ப்ராதா இருவரையும் த்யஜிப்பதாகச் சொன்னார் ஸர்வலோக ஶரண்யன். பேச்சுடன் நின்றதா? இல்லை. பெரும் புயலடித்தது. நாட்டில் ஒருவன் ஜானகியைச் சற்று லாகவமாகப் பேசினான். ஆயிரக் கணக்கான ப்ரஜைகளில் ஒருவன் வெளிப்படையாய்ப் பேசினால், அது நிச்சயம் அவனுடைய தனிப்பட்ட கருத்தாயிருக்க முடியாது. அவனைப்போல் எண்ணமுள்ளவரும், ஆனால் வெளிப்படையாகப் பேசாதவருமான இன்னும் பலருடைய கருத்தையே அது வெளிப்படுத்தும். ஸ்ரீ ராமபிரான் என்ன செய்தார்? ஸார்வபௌமனின் பத்நி அப்பழிக்கு உள்ளவளாக இருக்கக் கூடாது. ஒருபுறம் தூய்மையும் கற்பும் அன்பும் மார்த்தவமும் உருவெடுத்த ஜானகி! மறுபுறம் ராஜ்யத்தை ஆளும் பயங்கரமான கடமை! சில கடமைகளில் குறைவற்று நிற்க விரும்புபவர் சில அரிய த்யாகங்களைச் செய்துதான் தீரவேண்டும். புயலடித்தது. ஹிமாலயம் சற்று அசைவுற்றதுபோல் வணங்கி மறுபடியும் ஓங்கியது. மனிதனால் பொறுத்தற்கரிய துக்கத்தைத் தன்மேல் அப்பெருமான் ஏற்றுக்கொண்டார். ஸத்யத்தை நம்பினார். தர்மத்தை நம்பினார். பூர்ண கர்ப்பிணியான தன் பத்நியைக் காட்டிற்கு அனுப்பினார். ‘ராமாயணம் பழங் கதை; கேட்டால் புண்யம்’ என்பது பழம் பேச்சு. நண்பர்களே! பிரிந்து ஒரு நிமிஷம் உயிர் வாழ முடியாத தம்பதிகள், கடமையின் கோரமான நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுப் பிரியவேண்டி வந்தால், அந்த த்யாகத்தின் மாட்சிமையை அளக்க இந்த அகண்டமான உலகில் மனிதன் பிறந்திருக்கிறானா? ஸமுத்ரத்தின் ஆழத்தைக் காணலாம்; நில உலகத்தின் எல்லையைக் காணலாம்; வானத்திலே பறக்கலாம்; ஜலத்திலே நடக்கலாம்; ஸ்ரீ ராமபிரான் ஜானகியைத்

அறந்ததையும், அதை அப்பெருமாட்டி பஹுமானித்து அநுபவித்ததையும், இன்று வரையில் உண்மையாக யார் அளந்து கண்ணீர் விட முடியும்?

குணங்களில் ஈடுபடுவது ஹ்ருதயம். ப்ராதக் கால ஸ்நாந பாந ஜப தபாதிகளால் வரும் உயர்வும், ஸ்ரீ ராமபிரான் போன்ற லோக விலக்ஷண புருஷர்களின் உயர்ந்த கல்யாண குணங்களால் வரும் உயர்வும் ஒன்றல்ல. பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியும், ஸ்ரீ ராம கதை என்ன காட்டுகிறது? மனிதனுக்கு அருமருந்தாய் அவனை ஊக்கி வளர்த்து, அவனுக்கு ஒளி காட்டி, அவனை ஆதரவினால் நடத்தி, ஆறுதல் கூறி உயர்த்தி, அவனது ம்ருகத்தன்மையை மாய்த்து, அவனை மனிதனாக்கி, அவனது உள்ளத்தைக்—கொடிய பாறை மயமான ஓர் பாலைவனத்தை—இனிய நிழல் தரும் பூஞ்சோலையாக மாற்றவல்ல தென்றல், இந்த ஹ்ருதயத்தை நமக்களித்த பரந்தாமனுக்கு என்ன நன்றியறிவு செலுத்த வேண்டும்!

பசியினால் வாடி நொந்து குழிந்த கண்களுடன் நம்மை யாசித்து அணுகும் ஏழையிடம் இரங்குவது இந்த ஹ்ருதயம். ஆராத துயரத்தில் அலமந்து நிற்பவர்பால் படர்ந்து அவரது மனக் கலக்கத்தைத் தன் கலக்கமாக்கி, 'ஐயோ ஐயோ' என்றிரங்கி அவர்க்கு ஆறுதல் அளித்து, அவரது அமைதியைத் தம் அமைதியாக்கித் தருவது இந்த ஹ்ருதயமே. வாழ்வில் பழிக்குப் பழி எண்ணத்தை ஒட்டிப் பரோபகாரமாகும் நோக்கத்தை வ்ருத்தி செய்து, நொந்தவர் நலிந்தவர் தாழ்ந்தவர் பசித்தவர் பிணியாளர் யாவரிடமும் சென்று நம்மையும் நம் பொருள் யாவையும் அர்ப்பணம் செய்யச் சொல்லுவது இந்த ஹ்ருதயமே.

ஸர்வேச்வரன் ஏன் அவதரித்தான்? உபய விபூதிமானாகிய அவன் இந்த நாற்ற உலகிற்கு ஏன் வந்தான்? இருளும் கொடுமையும் நிறைந்து நேசம் சிறிதுமில்லாத கம்ஸனின் சிறைச்சாலையை ஏன் நாடினான்? வாளும் வேலும் ஈட்டியும் ஒன்றோடொன்று மோதி ம்ருக பலம் தலை விரித்தாடும் மதங் கொண்ட வெறியர்களுக் கிடையில் ஏன் அவன் தலைகாட்டினான்? பெண்களைக் கற்பழித்தும், முனிவரைக் கொன்றும், ஸ்வார்த்தபரரான கோர ராக்ஷஸர்களிடையே ஏன் நடமாடினான்? அன்பு தன் மந்தமான ஒளியை ஓரோ உள்ளங்களில் பரப்பிக்கொண்டிருந்ததனால் தான்! தேவகியின் உள்ளம், யசோதையின் உள்ளம், ஒரு அக்ரூரனின் உள்ளம், ஒரு கோபியின் உள்ளம்—இந்த உள்ளங்கள் என் செய்தன? பரமபதத்திலுள்ள பரவாஸுதேவனையும் உருக்கி நில உலகத்திற்கு இழுத்தன. ஹ்ருதயமே! நீ வாழி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஆஸ்திக்யம்

[ஸ்ரீமதஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் தேசிக தர்சந விஜயத்வஜ ஸ்ரீ. உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் டெல்லி ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரவில், விரோதி வருஷ ஆவணி மீ பல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. அவை ஷை ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. எல்லோருடைய ப்ரயோஜநத்திற்காக அவை தமிழில்மொழிபெயர்க்கப்பட்டு வெளிவருகின்றன].

வ்யாகரண சாஸ்த்ரத்தில் 'அஸ்தி நாஸ்தி திஷ்டம் மதி:' என்கிற ஸூத்ரத்தினால் 'அஸ்தி இதி மதி: யஸ்ய' என்கிற அர்த்தத்தில் 'அஸ்தி' என்கிற சப்தத்தின்பேரில் '஠க்' என்கிற ப்ரத்யயம் ஏறி ஆஸ்திகன் என்கிற சப்தம் உண்டாகிறது. ஆகையால் ப்ரத்யக்ஷத்திற்குக் கோசரமல்லாத விஷயத்தில் எந்த மனிதனுக்கு சாஸ்த்ரத்தைக்கொண்டு 'இது இப்படி உள்ளது' என்கிற நம்பிக்கை உண்டாகிறதோ, அவன் ஆஸ்திகன் எனப்படுவன். ஆஸ்திகனுடைய தன்மை ஆஸ்திக்யம் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆஸ்திக்ய புத்தி, அதிசயிதமான புத்திசக்தி யுள்ள மனிதனுக்கு லோகத்திலுள்ள பதார்த்தங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை நன்கு பராமர்சிப்பதினாலேயே உண்டாகிறது. இந்த விஷயம் முண்டகோபநிஷத்தில்,

'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்,

நாஸ்த்யக்ருத: க்ருதேந'

என்று ஓதப்பட்டிருக்கிறது. இதைச் சற்று விளக்குவோம்.

ப்ராஹ்மண:—'ப்ரஹ்ம' என்றால் வேதம்; அதை அநயதி—ஜீவிக்கச் செய்கிறான் என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு 'ப்ராஹ்மண' சப்தம் வேதத்தை ரக்ஷிக்க யோக்யதையுள்ள த்ரைவர்ணிக மனிதர்களைச் சொல்லுகிறது. 'லோக' சப்தம் இந்த உலகிலுள்ள ப்ராணிகளைச் சொல்லுகிறது. இதனால் கிடைத்த பொருள், 'வேதத்தை ஸாங்கமாய் அத்யயநம் பண்ணின புருஷன் கண்ணுக்குத் தெரிகிற ப்ராணிகளை, ஸமுத்ரத்தைப் பார்க்கிற மாதிரியில்லாமல் சுற்றிலும் நன்றாகப் பார்த்து' என்பது. அப்படிப்பட்ட பார்வையில் ஸ்தாவரங்களின் பரீக்ஷண ப்ரகாரம் சாந்தி பர்வத்தில் கீழ்வருமாறு சொல்லப்படுகிறது.

"ஊஷ்மதோ ம்லாயதே வர்ணம் த்வக் பலம் புஷ்பமேவ ச ।
ம்லாயதே சீர்யதே சாபி ஸ்பர்சஸ்தேநாத்ர வித்யதே ॥
வாய்வக்ந்யசநிநிர்கோஷை: பலம் புஷ்பம் விசீர்யதே ।
ச்ரோத்ரேண க்ருஹ்யதே சப்த: தஸ்மாச்ச்ருண்வந்தி பாதபா: ॥

வல்லீ வேஷ்டயதே வ்ருக்ஷம் ஸர்வதஶ்சைவ கச்சதி ।
ந ஹ்யத்ருஷ்டேஶ்ச மார்கோ(அ)ஸ்தி தஸ்மாத் பஶ்யந்தி பாதபா: ॥
புண்யாபுண்யைஸ்ததா கந்தைர் தூபைஶ்ச விவிதைரபி ।
அரோகா: புஷ்பிதா: ஸந்தி தஸ்மாஜ்ஜிக்ரந்தி பாதபா: ॥
பாதை: ஸலிலபானாச்ச வ்யாதீனாம் சாபி தர்ஶனாத் ।
வ்யாதிப்ரதிக்ரியத்வாச்ச வித்யதே ரஸனம் த்ருமே ॥
ஸுகது:கயோஶ்ச க்ரஹணாச்சின்னஸ்ய ச விரோஹணாத் ।
ஜீவம் பஶ்யாமி வ்ருக்ஷாணாம் அசைதன்யம் ந வித்யதே ॥

வ்ருக்ஷா: ப்ராஹ்மணம் ப்ரூதி—

வய:ஸ்ரீம் ததா ஶீதம் வர்ஷம் ச ஸஹதே நித்ய ।
ஸம்ஹாரஸஹதம் சைவ ததா சேதனஹேதனே ॥
ஸர்வஸம்ஹதா நஸ்யாத் ந ஸ்ஞானஹஸ்ரஹஸ்ரமபி ॥ ”

இப்படி ஸ்தாவரங்கள் (கல், மரம், செடி, கொடி முதலியவை) விஷயத்தில், அவைகளுக்கு இந்த்ரியங்க ளிருந்தும் அவைகளின் மூலமாய்க் காற்று, மழை, நெருப்பு, வெயில் முதலியவை காரணமாய் நிரந்தரமாய் அதிக துக்கத்தை யநுபவிக்கின்றன வென்றும், தேவ திர்யக் (ஆடு மாடு முதலியவை) மனிதர் களுடைய ப்ரயோஜனத்திற்காகவே இருக்கின்றன வென்றும் அறிவதும் இவ்விடத்தில் ‘ வநீக்ஷ்ய ’ என்பதினால் சொல்லப்படுகிறது. மேலும்,

“ ஶரீரஜை: கர்மதோஷைர் யாதி ஸ்தாவரதாம் நர: ।
த்ருணகுல்மலதானாம் ச க்ரவ்யாதாம் தம்ஷ்ட்ரிணாமபி ॥
க்ரூரகர்மக்ருதாம் சைவ ஶதஶோ குருதல்பக: ।
மாஸம் ஹந்தாக்ருத்ய ஸம்க்ருத்ய ”

என்று மநு சொல்லுகிறபடியே, பூர்வ ஜந்மத்தில் ஶரீரத்தினால் பண்ணப்பட்ட கொடிய பாபங்களினால் ஸ்தாவர ஜந்மம் கிடைக்கிறதென்று தெரிந்துகொள்வதும் ‘ வநீக்ஷ்ய ’ என்பதினால் சொல்லப்படுகிறது. பிறகு திர்யக் விஷயத்திலும் ஆநுஶாஸநிக பர்வத்தில் இப்படியே சொல்லப்படுகிறது. வழியில் போகிற ஒரு வண்டி, தன்மேல் ஏறுமளிருக்கும்படி அதன் வழியிலிருந்து விலகி ஓடுகிற ஒரு புழுவைப் பார்த்து வ்யாஸர்

“ ஶ்ருத்வம் ஸ்பஷ்டம் ஶப்தம் மஹாந்தம் ஹே மநஸ்த்வத்ராஸ்த்ரம் வ்ஹ்ருது ।
நாஸிகா நாஸி கீட த்வம் ஶ்ரோபா ஶரணமேவ தே ॥ ”

என்று சொல்ல, புழு வ்யாஸரைப் பார்த்து,

“ ஸர்வத்ர நிரதோ ஜீவ: ஸ்வஹாவி ச ஸம்பவம் ஸஸ ।
இந்த்ரியாணி ஸஹ ப்ராஜ்ஞ தஸ்மாதிச்சாமி ஜீவிதும் ॥
ஸ்வஹாவி விஷயஸ்வேஷ யதாதேஹம் ப்ரவர்த்தத: ।
ஸந்த்யக்திபத்மாநேத்ரவ ப்ரயஹேஶ்மா விஶேஷத: ॥ ”

என்று சொல்லிற்று. இதனால் திர்யக்குகளுக்கு இந்த்ரிய ஸம்பந்தமான ஸுகம் இருந்தபோதிலும் ‘ க்ஷுதாஸ்த்ரிப்ராஹபமேயமநாமி ஸாதனேதக

வஶீ‍ஹி நுமாணாழ' என்கிறபடி சில ஆகாரங்களினல் மனிதருடன் ஸமானமா யிருந்தபோதிலும்,

" ஸுஹிம்ஸா ஸதத்ய ஜ்ஞேயம் ப்ராண அபி ப்ரியநிரூஹ: ।
தா நம் உஜோ உயாகூதாங்கிவை ஷாம் யஜூஷாரூய நழ ॥
ஸா நம் ஸநூதா ஜவொ ஷொரஃ "

என்று சொல்லப்படுகிற ஸாமாந்ய விசேஷ தர்மங்களை அநுஷ்டிக்கிற க்லேஶங்க ளில்லாமல் ஸ்வச்சந்தமாய் விஷயங்களை யநுபவிக்கவும், அதனல் அதிக ஸுகாநுபவம் பண்ண அர்ஹதை யுள்ளவைகளா யிருந்தபோதிலும், தேஶாந்தரங்களில் ஸஞ்சரிக்க கால், இறகு, இவைகளை யுடையனவாய், ஸ்தாவரங்களைப்போல் மழை வெயில் நெருப்பு மனிதன் இவைகளால் உண்டாகிற சீதம் தஹிப்பது வெட்டப்படுவது முதலிய நிரந்தர க்லேஶங்கள் இல்லாத போதிலும், அவைகளைவிட மேலான ஜ்ஞாந ஸுகங்களை யுடையனவாயிருந்த போதிலும், திர்யக்குகள் கையில்லாமையாலும் பேச முடியாமையாலும் வெகு துன்பத்தை அநுபவிக்கின்றனவாய்க் காணப்படுகின்றன. இந்த விஷயம் ஶாந்தி பர்வத்தில் கீழ்வருமாறு சொல்லப்படுகிறது.

காச்யபன் என்கிற ஓர் ஏழை அந்தணன், பணக்கினல் கொழுப் படைந்த ஒரு வர்த்தகனைக் காட்டு மார்க்கத்தில் ஸந்தித்தான். இருவரும் ஸந்தித்தபோது வர்த்தகனல் ப்ராஹ்மணன் அவமதிக்கப்பட்டுத் தன் ஏழ்மைத் தனத்தைப்பற்றி மிகவும் ஶோகித்து உயிரை நீக்க எண்ணினன். அப்பொழுது இந்த்ரன் ப்ராஹ்மணனுக்குத் தெளிவை யுண்டாக்க ஒரு நரியின் வடிவம் கொண்டு அவனருகில் வந்து,

" ஸுஹொஸிஃயூ தா தெஷாம் யெஷாம் ஸந்தீஹ வாணய: ।
வாணிமத்ஃ ஸ்வூ ஹாஃஸூ: கம் யதா தவ யநஸூ வெ ॥
ந வாணிமூாஹாஃயிகொ மூாஹ: குஶ ந விஃதெ ।
ஸுவாணிஸ்வாஃயம் ஸஹா கணம் நொஃஷொ ॥
ஜஹெஃ நஃாவதா நஜெ ஷுஶதொ ந கூஷாஃ வா ।
ஸுய யெஷாம் வா ந: வாணீ ஜெவஃ த்ள உஶாஃ ஸ்ரீ ।
உஃாஹி கூஃநஃாஃஶதொ நிகஷஹி அ ।
வஷாஃதவஹிஃநாம் அ வகிதாணா நி கவஃதெ ।
ஜெமூஃநம் ஸ்வவம் ஶயூாம் நிவாதம் ஜொ வஹஃஜ்ஜெ ॥
ஸுஷிஷாய அ மாம் ஞொகெ ஹஃஜஜை வா ஹயஜி அ ।
யெவமூஜிஹாஃ கூவணா: ஸுஶூூாணா ஸுவாணய: ।
ஸஹஜெஷ்தாமி தஃவாமி ஷிஷூூா ஸூவம் நதயா உநெ ॥ "

என்று கூறினன். மேலும்,

" நகஃஜொ உஷிகாநத்தி ஸிஷாஜொ நகஃமும் தயா ।
ஸிஷாமூஃதி ஸ்வூ ராஜநு ஸ்வூ நம் வஃாமூஃ மஸூயா ॥
தாநதி வஃஷாஸ்வவஃாநு வஶஃயஜெஃ யயாமத: ।
ஸுஹஷா மி ஸஹஷா நாம் ஜீவொ ஜீவஸூ ஜீவநழ ॥ "

என்கிறபடியே திர்யக்குகள் மனிதர்களினால் தங்கள் ஸுகத்திற்காக இஷ்டப்படி நியமிக்கப்பட்டும், கட்டப்பட்டும், ஹிம்ஸிக்கப்பட்டும் துக்கத்தை யநுபவிக்கின்றனவென்று தெரிந்துகொள்வதும் 'பரீக்ஷ்ய' என்பதினால் சொல்லப்படுகிறது. பிறகு,

'பு³த்³தி⁴மத்ஸு நரா: ஶ்ரேஷ்டா²:' என்று மநுவாலும்,

"ததோ(அ)நந்தரஜா: பஶவோ ம்ருக³பக்ஷிஸரீஸ்ருபா: |
ந்ருத்வம் நா ந்ருத்வ நதஶாஶ்ரேயோ வ்ருக்ஷகு³ல்மாதி³யோநிஷு"

என்று பராஶரராலும் மநுஷ்ய ஜந்மம் திர்யக்குகளைவிட மேன்மை பெற்றதென்று சொல்லப்படுவதால், அப்படிப்பட்ட மேன்மை மனிதர்களுக்கு எந்த ஆசாரத்தால் உண்டாகிறதென்பதைப் பற்றிப் பரீக்ஷிப்பதும் 'பரீக்ஷ்ய' என்பதினால் சொல்லப்படுகிறது.

"ஸம்யதாத்மாபி த³க்ஷாத்மா மதிமாநபி வா நர: |
த்³ருஶ்யதே நிஷ்ப²லாரம்ப⁴: ப்ரஹீணாஸ்ஸர்வது³:கி²த: ||
ஸந்தி சாந்த்⁴ராஸ்ஸம்பதோ³ த³ரித்³ராணாம் நிஷ்டி²தா: |
நாஸ்தி சார்த்²யஸம்பந்நாம் விதி⁴த்ரம் விதி⁴சேஷ்டிதம் ||
ப்ராணிநாம் ஸந்த்³ரோஹம் ஹோமம் ஶக்தி ந த்³ருஶ்யதே |
த³ரித்³ராணாம் ஹி ஸம்பி⁴ஷ்ட: கஷ்டத³ஶாபி ஜீவதி ||
வைசித்ர்யம் வ்ருத்தபாஸ்ஸந்தி ப³லவந்தோ து³ர்ப³லா: |
ஹீநத்வமபரே ஷண்டா: விதி⁴த்ர: காலபர்யய: ||
கர்மாணி ஸர்வஸம்பந்நா து³:க²ரூபா ஸுகா² த்³ருஶ்யதே |
ஸுக²து³:கா²நி ஸர்வாணி ஸம்ஹதா த்³ருஶ்யதே ஸதா³ ||
த்³ருஶ்யதே ஹி யதா²வேத³ விநஶ்யந்தி ஸஹஸாந்தர: |
த³ரித்³ரஶ்ச பரிக்லிஷ்ட: ப³ஹுதா⁴பக்ஷேத்ர ஜராந்வித: ||"
நரீ யேயா ந ஜீயேயா ஸமே ஸத்யா: ஸமது³:கா²லிகா: |
நாப்ரியம் ப்ராப்தி வஶ்யேயா: விஸ்ருஷ்டபலி நோ ஹவேத் ||"

என்று சொல்லுகிறபடியே மனிதர்களில் குலம் சீலம் வயஸ் ஜீவநம் ஜ்ஞாநம் பணம் ஸுகம் துக்கம் முதலியவை காரணமாய் அநேக வித வித்யாஸங்கள் காணப்படுகின்றன.

இப்படி மனிதர்கள் ம்ருகங்கள் மரம் செடிகள் முதலியவைகளில் காணப்படுகிற வித்யாஸங்களுக்கு என்ன காரணமென்று புத்திமான்கள் பரீக்ஷிக்கவேண்டியது ஆவச்யகம். அப்படிப் பரீக்ஷிக்கும்பொழுது ப்ரத்யக்ஷாநுமாநங்களினால் இந்தக் காரணம் நிர்ணயிக்க முடியாதென்பது ஸ்பஷ்டமாகும். பிறகு கால ஸ்வபாவம், யாத்ருச்சிகம், அத்ருஷ்டம் என்கிற லோக ப்ரஸித்தமான மூன்று காரணங்களில் காலம் அசேதநமாகையாலும் கார்ய ஸாமாந்யத்தைப்பற்றி ஸாதாரண காரணமாகையாலும் விசேஷ காரணமாகாது. ஏனென்றால்,

" [illegible]
[illegible] ॥ "

என்கிறபடி மனிதர்களுடைய விபரீத ஜ்ஞாநத்திற்குக் காலம் ஸாதாரண காரணமானாலும், கலியுகாதிகளில் துஷ்ட ஸஹவாஸாதிகள் விசேஷ காரணமென்று சொல்லவேண்டியது. அப்படியே யாத்ருச்சிகம், என்கிறதும் விசேஷ காரணமாகாது. மீமாம்ஸகர் சொல்லும் அத்ருஷ்டமும் அசேதநமானதால் விலக்ஷணமான கார்யங்களைச் செய்யமாட்டாது. பிறகு எது காரணமென்னில்: அந்தந்த ஆத்மாக்களினால் பண்ணப்பட்ட பாபபுண்ய ரூப கர்மங்களினால் உண்டான ஸர்வேச்வரனுடைய நிக்ரஹாநுக்ரஹ ரூப ஸங்கல்பம்தான் மேற்கூறின எல்லாவித வித்யாஸங்களுக்கும் காரணமென்று அறிய வேண்டும். இதை அபிப்ராயத்தில் கொண்டுதான் '[illegible]' என்று ஓதப்பட்டது.

'கர்ம' சப்தம், கர்மத்தினாலுண்டான பகவானுடைய ஸங்கல்ப ரூபமான அத்ருஷ்டத்தைச் சொல்லுகிறது. இந்த விஷயத்தில் ப்ரத்யக்ஷாநுமானங்கள் ப்ரமாணங்களல்லாமையால், சப்த ப்ரமாணமென்று சொல்லப்பட்ட ச்ருதி ஸ்ம்ருதிகள் ப்ரமாணமாகக் கொள்ளவேண்டி வரும்பொழுது.

" [illegible] ...... [illegible] ।
[illegible] ...... [illegible] ।
[illegible] .... [illegible] ॥ "

என்கிற ச்ருதிகளினாலும்,

" [illegible]
[illegible]
[illegible] " என்கிற கௌதமஸ்ம்ருதி வசநத்தாலும்,

" [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥ "

என்கிற வசநங்களாலும் சொல்லப்படுகிறபடியே மனிதர்களில் பரஸ்பர ஸுக துக்காதி வித்யாஸங்களுக்கு அவ்வவ்வாத்மாக்களால் பூர்வ ஜந்மத்தில் பண்ணப்பட்ட கர்மம் காரணமென்பது '[illegible]' என்பதினால் சொல்லப்படுகிறது. இப்படியே

"𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌨 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌨𑌰𑍋 𑌨 𑌪𑌶𑍁𑌰𑍍𑌨 𑌚 𑌪𑌾𑌦𑌪𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌪𑍈𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌨𑌯𑌃 ॥
𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌗𑍌𑌰𑌜𑍋 𑌵𑌾𑌜𑍀 𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑍋 𑌵𑌿𑌹𑌗𑌸𑍍𑌤𑌰𑍁𑌃 ।
𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑌸𑌂𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌹𑍇𑌤𑍁𑌷𑍁 ॥"

என்கிறபடி தேவதைகள் முதலான சரீரங்கள் கர்ம மூல மாகையால் அந்த தேஹங்களுக்கு அதீனமான போகங்களும் கர்ம மூல மென்பது சொல்லப்பட்டதாயிற்று. [தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ௵ ஆடி ௴ [1950 ௵ ஜூலை - ஆகஸ்ட் ௴]

[தக்ஷிணாயநம், க்ரீஷ்ம ருது, கடக ௴.]

16—7—50	1௳	ஞாயிற்றுக்கிழமை ...	சூந்ய திதி; ஆடிப் பண்டிகை; தக்ஷிணாயந புண்ய காலம்; கடக ரவி 23-14 (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
17—7—50	2௳	திங்கட்கிழமை ...	சூந்ய திதி
18—7—50	3௳	செவ்வாய்க்கிழமை ...	கடக சுக்ல சதுர்த்தி திதி
25—7—50	10௳	செவ்வாய்க்கிழமை ...	ஸர்வ ஏகாதசி (சயந ஏகாதசி)
26—7—50	11௳	புதன்கிழமை ...	கடக சுக்ல த்வாதசி திதி
27—7—50	12௳	வியாழக்கிழமை ...	த்ரயோதசி — சதுர்த்தசி திதி த்வயம்
28—7—50	13௳	வெள்ளிக்கிழமை ...	ஸ்ரீ ஆளவந்தார் திரு நக்ஷத்ரம்
2—8—50	18௳	புதன்கிழமை ...	பதினெட்டாம் பெருக்கு
4—8—50	20௳	வெள்ளிக்கிழமை ...	கடக க்ருஷ்ண ஸப்தமி திதி
5—8—50	21௳	சனிக்கிழமை ...	கடக க்ருஷ்ணாஷ்டமி திதி
6—8—50	22௳	ஞாயிற்றுக்கிழமை ...	அதிதி
7—8—50	23௳	திங்கட்கிழமை ...	கடக க்ருஷ்ண நவமி திதி
9—8—50	25௳	புதன்கிழமை ...	ஸர்வ ஏகாதசி
12—8—50	28௳	சனிக்கிழமை ...	ஸ்ரீ அ. மடம் 36-ம் பட்டம் ஸ்ரீ ஸ்ரீ ஸிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
13—8—50	29௳	ஞாயிற்றுக்கிழமை ...	ஸர்வ அமாவாஸ்யை
14—8—50	30௳	திங்கட்கிழமை ...	கடக சுக்ல ப்ரதமை திதி
15—8—50	31௳	செவ்வாய்க்கிழமை ..	கடக சுக்ல த்விதீயை திதி; திருவாடிப்பூரம்
16—8—50	32௳	புதன்கிழமை ...	கடக சுக்ல த்ருதீயை திதி; ஸிம்ஹ ரவி 51-26; (மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்)

ஸ்ரீ:

[illegible]

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[illegible]

---

1 [illegible]
[illegible] ॥

2 [illegible]
[illegible] ॥

3 [illegible]
[illegible] ॥

4 [illegible]
[illegible] ।

5 [illegible]
[illegible] ॥

6 [illegible]
[illegible] ।

7 [illegible]
[illegible] ॥

8 [illegible]
[illegible] ॥

9 [illegible]
[illegible] ॥

10 [illegible]
[illegible] ॥

11 [illegible]
[illegible] ॥

12 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

13 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

14 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

15 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

16 [illegible]
[illegible]
[illegible]

17 [illegible]
[illegible]

18 [illegible]
[illegible]

19 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

20 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

21 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மாதரிச்வ பத ப்ரயோஜநம்.

ப்ரஹ்ம மீமாம்ஸையில் வியததிகரணத்தில் 'ஏதேந மாதரிச்வா வ்யாக்யாத:' என்கிற ஸூத்ரத்தில் 'ஆகாசாத்வாயு:' என்கிற விஷயவாக்யத்தில் உள்ளதாயும் ப்ரஸித்தமாயும் இரண்டு அச்சுக்கள் உள்ளதுமான வாயு பதத்தை ப்ரயோகிக்கவேண்டியிருக்க, விஷய வாக்யத்தில் இல்லாததாயும் அவ்வளவு ப்ரஸித்தி பெறாததும் நான்கு அச்சுக்கள் உள்ளதுமான 'மாதரிச்வ' பதத்தை ப்ரயோகித்ததற்குக் காரணம் என்னவென்று ஆக்ஷேபம் செய்யப்படுகிறது. இதற்கு வித்வத் ஸம்மதமான ஸமாதானம் விஜ்ஞாபநம் பண்ணப்படுகிறது.

ஸித்தாந்த கௌமுதியில் உணாதி ப்ரகரணத்தில் முதல் பாதக் கடைசியில் 'ச்வந்நுக்ஷந்........மாதரிச்வந் மகவந்நிதி' என்கிற ஸூத்ரத்துக்கு, 'ஏதே ச்வந்ப்ரத்யயாந்தா நிபாத்யந்தே......மாதரி—அந்தரிக்ஷே, ச்வயதீதி மாதரிச்வா, யாதொஸிகா.சலுொவ:' இத்யாதியான வ்யாக்யாநமிருக்கிறது. இதன் வ்யாக்யாநமான ப்ரௌடமநோரமையில் 'ஸப்தம்யா அலுக்' என்று எழுதப்பட்டிருக்கிறது. நாமலிங்காநுசாஸன வ்யாக்யாநமான 'ஸுதை'யில் 'மாதரிச்வ' பதத்துக்கு 'மாதரி இதி ஸப்தம்யந்தப்ரதிரூபகமவ்யயம் | மாதரி அந்தரிக்ஷே ச்வயதி ஸஞ்சரதி. டுஓச்வி கதிவ்ருத்த்யோ:, ச்வா-வ-ஸெ, யத்வா மாதரி ஜநந்யாம் ச்வயதி வர்த்ததே ஸப்தம்யா அலுக், 'ச்வந்நுக்ஷந்' (2-1-165) இதி நிபாதநாத் ஸப்தம்யா அலுக்' என்று வ்யாக்யாநமிருக்கிறது. லிங்காபட்டீயம் என்னும் வ்யாக்யாநத்தில் 'மாதரி ஆகாசே ச்வயதி, வர்த்ததே இதி மாதரிச்வா ந-வ-டுஓச்வி கதி வ்ருத்த்யோ:' என்று இருக்கிறது இந்த க்ரந்தங்களிலிருந்து வாயுவானது தன்னை உண்டு பண்ணின ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறதாலோ, வ்ருத்தியை அடைவதாலோ, 'மாதரிச்வா' என்று சொல்லப் படுகிறதாக ஏற்படுகிறது. இந்த அர்த்தமுள்ள 'மாதரிச்வ' பதத்தை ப்ரஹ்ம ஸூத்ரத்தில் ப்ரயோகித்தது, ஒரு காரணப்பொருளின் அறிவினால் எல்லாக் காரியப் பொருட்களுடையவும் அறிவு உண்டாகிறதென்கிற ப்ரதிஜ்ஞை முதலிய காரணங்களால் ப்ரஹ்மத்தின் கார்யப் பொருளாகக் கீழே தீர்மானிக்கப் பட்ட ஆகாசத்திலிருந்து வாயுவானது உண்டாகி, அதில் ஸஞ்சாரத்தையோ வ்ருத்தியையோ அடைவதால், ஆகாசம் போல் வாயுவும் கார்யப்பொருளே; வாயுவின் உத்பத்தியைத் தெரிவிக்க 'மாதரிச்வா' என்னும் அதன் பெயரே போதுமானதென்று இம்மாதிரியான அர்த்த விசேஷங்களைத் தெரிவிப்பதற் காகவேதான்.

ஆகையால், இந்த ஆகாசத்தின் உத்பத்தியின் காரணத்தால் வாயுவின் உத்பத்தியை நிர்ணயம் செய்யும் இந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தில் வாயுவைத் தெரிவிக்கக் கீழ்ச் சொன்ன காரணத்தால் மாதரிச்வ பதப்ரயோகந்தான் பொருத்த மானது.

ஓர் வைதிகன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

செய்திகள்

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் வார்ஷிகாராதந மஹோத்ஸவம்

நிகழும் விக்ருதி ஸூ சித்திரை மீ°. 27உ (9–5–'50) செவ்வாய்க்கிழமை, ஸ்ரீரங்கம் ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமதித்யாதி.........ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிகாராதநம், ஸ்ரீமதித்யாதி ....தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருவோலக்கத்தில் இரண்டு நாள் முந்தி ஸ்ரீ வேதபாராயணம் திவ்ய ப்ரபந்தம் ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேபங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு, சாத்துமறை பெருமாள் தீர்த்தம் பாதுகாதீர்த்த விநியோகாதிகளும், அநந்தரம் ததீயாராதநமும் வர்ஷ ப்ரதி வர்ஷம்போல் நடந்தது. இந்த ஆராதநத்துக்கு, ஸ்ரீ தேசிக தர்சந விஜயத்வஜ ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மைஸூர் ஸ்ரீ அஹோபில மடம் ஆராதகர் வித்வான் ஸ்ரீ. உப. சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமி, மற்றும் கோஷ்டீபுரத்திலிருந்தும் தையாறு முதலான இடங்களிலிருந்தும் ஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்து ஷ கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்து வைத்து ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபைக்குப் பாத்ர மானார்கள். பாராயணக்காரர்களுக்கு உசிதமாக ஸம்பாவனை பண்ணப்பட்டது. இந்தக் கைங்கர்யத்தை; ரிடயர்ட் எஞ்ஜினீர் ஸ்ரீ. உப. புலியூர் ஸ்ரீநிவாஸையங்கார் முதலியோர் தலைமை வஹித்து மிகுந்த ச்ரத்தையுடன் நிர்வஹித்து நடத்திவைத்தார்கள்.

புரிசை. ரங்கநாத தாஸன்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1950ஸூ மேமீ

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை ரூ.
27	ஸ்ரீ.	R. L. நாராயணன், கல்கத்தா	50	3
61	,,	L. ஸ்ரீராமாச்சாரியர், வக்கீல், ஆரணி	49	3
124	,,	C. S. ஸௌந்தராசார்யர், பம்பாய்	50, 51	6
132	,,	D. ராமானுஜய்யங்கார், ஸந்யாஸிக்ராமம்	47 to 50	12
137	,,	P. S. கோவிந்தய்யங்கார், ஸ்ரீரங்கம்	50	3
140	,,	S. பெருமாள் ரெட்டியார், பரங்கிமலை	,,	3
144	,,	R. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீரங்கம்	,,	3
154	,,	K. அய்யாவய்யங்கார், எலமனூர்	,,	3
155	,,	T. S. நாராயணய்யங்கார், ,,	,,	3
252	,,	லக்ஷ்மீநரஸிம்மய்யங்கார், கோவில் வெண்ணி	,,	3
255	,,	S. ஸம்பத் அய்யங்கார், ,,	,,	3
388	,,	D. வேதாந்தாசார்யர், கல்கத்தா	,,	3
402	ஸ்ரீமதி.	S. ரங்கம்மாள், திருவல்லிக்கேணி	49	3
448	ஸ்ரீ.	ஆழ்வாரய்யங்கார், திருநெல்வேலி	50	3
543	,,	K. சாரங்கபாணி அய்யங்கார், திருவெண்ணெய் நல்லூர்	,,	3

560	,,	R. S. அய்யங்கார், கல்கத்தா	49	3
562	,,	A. நரஸிம்மாசாரியர், ,,	50	3
578	,,	K. V. பாஷ்யமய்யங்கார், ஜி. டி. சென்னை	,,	3
670	,,	T. V. ராஜகோபாலய்யங்கார், தண்ணீர்பள்ளி	,,	3
684	,,	B. ரங்கஸ்வாமி அய்யங்கார், காஞ்சீபுரம்	49	3
758	,,	M. V. வரதாசார்யர், பம்பாய்	50	3
796	,,	D. P. தாதாசாரியர், வக்கீல், கள்ளக்குரிச்சி	,,	3
987	,,	ராஜஸேவாப்ரஸக்த. A. N. ராகவாசார், M.A., M.C.S., பம்பாய்	,,	3
988	,,	R. ஜகன்னாதன், கோரேகான், ,,	,,	3
989	,,	H. R. S. அய்யங்கார், ,, ,,	,,	3
990	,,	V. S. கோபாலன், மாதுங்கா ,,	,,	3
991	,,	K. சேஷாத்ரி அய்யங்கார், ,,	,,	3
992	,,	T. P. வரதாச்சாரி, ,,	,,	3
993	,,	S. ராமஸ்வாமி, ,,	,,	3
994	,,	K. ரங்கஸ்வாமி அய்யங்கார், ,,	,,	3
995	,,	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸபா, ,,	,,	3
997	,,	K.S. திருநாராயண அய்யங்கார், மீடாமங்கலம்	,,	3

ஆக ரூ. 108

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா பாக்கி

1947ஸ்ரீ முதல் 1950 முடிய நான்கு வருஷச் சந்தா (ரூ. 12) பாக்கியுள்ளவர்களின் சந்தா நம்பர்கள்

32, 78, 114, 160, 242, 263, 405, 444,
470, 552, 558, 585, 595, 646, 661, 728,
681, 685, 689, 692, 705, 718, 719, 726,
733, 741, 743.

1948 ஸ்ரீ முதல் 1950 முடிய மூன்று வருஷச் சந்தா (ரூ. 9) பாக்கியுள்ளவர்களின் சந்தா நம்பர்கள்

2, 12, 51, 91, 129, 166, 229, 278,
347, 380, 456, 501, 506, 508, 515, 529,
550, 611, 638, 656, 673, 690, 713, 731,
738, 751, 757, 759, 760, 762, 781, 788,
830, 831.

1949ஸ்ரீத்திய சந்தாவைச் சிலர் இன்னும் அனுப்பவில்லை.

இப்படி பாக்கி யிருக்க விடுவது உசிதமல்ல வென்பதை அவர்கள் உணர்ந்து உடனே ஷை தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிவைக்க வேண்டு மென ப்ரார்த்திக்கிறோம். 1950 ஸ்ரீத்திய சந்தாவைப் பலர் அனுப்பி யிருக்கிறார்கள். மற்றவர்களும் சீக்கிரம் அனுப்பவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

* சந்தா அனுப்பும்போது மறக்காமல் சந்தா நம்பரையும் விலாஸத்தையும் குறிப்பிடவும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

[illegible]

ப்ரஸித்தமான தென்னுட்டு திவ்ய தேசங்களி லொன்ருகிய தேரழுந்தூரி லுள்ள ஸ்ரீ அஹோபில மடம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு, அங்கு சென்ற வைகாசி மீ 9வ. திங்கட்கிழமை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், இவர்களின் திவ்ய மங்கள விக்ரஹ ப்ரதிஷ்டைகளும் மஹாஸம்ப்ரோக்ஷணமும் சிறப்பாக நடந்தேறிய செய்தியை நமது வாசக மஹாசயர்கள் ஸமாசாரப் பத்ரிகைகள் மூலம் தெரிந்து கொண்டிருப்பார் களென்று நம்புகிருேம். அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க ஸ்ரீ அழகியசிங்கர் அந்தக் கைங்கர்யங்களைச் செய்யும்படி நியமித்து அதற்கு வேண்டிய த்ரவ்யத்தையும் அவ்வப்போது அநுக்ரஹித் தருளினர். அதோடு 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்ய மங்கள விக்ரஹ ப்ரதிஷ்டையும் அன்று நடந்து அர்ச்சாரூபியான அந்த ஸ்ரீ அழகியசிங்கர் பிறகு ராஜமன்னர் கோயில் ஸமீபத்திலுள்ள வடுவூர் அக்ரஹாரத்திலிருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்திற்கு பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகப்பட்டார் என்றும் அறிகிருேம். இக்கைங்கர்யங்களுக்கு சுமார் ஐயாயிரம் ரூபாய்க்குமேல் செலவு ஆயிற்றென்றும் அந்தத்தொகை முழுதும் ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே கொடுக்கப்பட்டதென்றும் தெரிகிறது. ஸ்ரீ அழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட அந்த த்ரவ்யத்தைக் கொண்டு அவ்வூர் வாஸிகள் மிக்க ச்ரத்தையுடன் இந்தக் கைங்கர்யத்தை நடத்திக் கொண்டனர். அவ்வூரிலுள்ள ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபையாரும் அத்யாபக வேதபாராயண ஸமிதியாரும் முன்னின்று இம்மஹோத்ஸவத்தை நன்று நடத்திவைத்தனர். அத்யாபக வேதபாராயண கோஷ்டிகளுடனும், பல வித்வான்களின் உபந்யாஸங்களுடனும் இவ்வுத்ஸவம் இனிது நடந்தேறியது.

தேரழுந்தூர் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம்

* * * * * * *

ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்த அநேக திருப்பதிகளிலும், மற்றும் பல புண்ய க்ஷேத்ரங்களிலும் அக்ரஹாரங்களிலும் ஸ்ரீ அஹோபில மடங்கள் இருக்கின்றன. அம்மடங்களை நாம் இக்காலதேச வர்த்தமானங்களுக்கநுகுணமாக எவவாறு நன்கு பயன் படுத்திக்கொண்டு ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியைச் செய்யலாமென்று நம்மில் ஒவ்வொருவரும் ஆலோசித்துத் தக்கபடி நடந்து கொண்டோமாகில் அது பல விதத்திலும் ச்ரேயஸ்கரமாயிருக்கும். கல்வி கற்ப

தற்காக நமது சிறுவர் சிறுமிகளை இக்காலம் நாம் அனுப்பிவரும் பள்ளிக்கூடங்களில் நமது ப்ராசீனமான சாஸ்த்ரீய ஆசாரங்களும், பழக்கங்களும் போதிக்கப்படப் போவதில்லையென்று நிச்சயமாய் ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தாரால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் மத போதனை நடத்தப்படமாட்டாது என்று கூட தற்போதைய அரசியல் சட்டத்தில் ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நாஸ்திக்யமும் வைதிகமார்க த்வேஷமும் தொற்று நோய்போல் விரைவில் பரவக்கூடிய ஒரு சூழ்நிலையில் கல்விபயில நமது குழந்தைகளை நாம் அனுப்பிக்கொண்டு வருகிறோம். வைதிக மார்க்கத்தின் சிறப்பையும் நம் ஸம்ப்ரதாயத்தின் உண்மைகளையும் அறியமாட்டாதபடி அவர்களை அதே நிலையில் தொடர்ந்து இருந்துவர நாம் அநுமதித்தால், ஒரு தலைமுறைக்குப் பிறகு நம் ஸித்தாந்தத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் என்ன நேருமோ என்று நாம் அஞ்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிர வருஷங்களாக நம் முன்னோர்கள் உயிருக்குயிராய் பாதுகாத்து நமக்குக் கொடுத்திருக்கும் மஹாநிதியான அவற்றை நாம் இழக்கலாகாது. ஒவ்வொரு ஊரிலும் நம் சிறுவர்களுக்கு ஸாம்ப்ரதாயிகமான ஆசாரங்களுடனும் பழக்கங்களுடனும் வித்யாப்யாஸம் செய்துவைக்கும்படி தனிப்பாடசாலைகள் ஏற்படுவதென்பது இக்காலஸ்திதியில் ச்ரம ஸாத்யமே. எனவே நமது சிறுவர்கள் இப்போது போகிறபடி பள்ளிக்கூடங்களுக்குப் போய்க்கொண்டே ஓழிந்த வேளைகளில் நம் ப்ராசீன தர்மங்களையும், கலாசாரங்களையும் கற்கக்கூடிய வழிகளை நாம் தேட வேண்டும். அந்தந்த ஊரிலுள்ள சிறுவர்களை அவ்வூரிலுள்ள மடத்தில் காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒன்று சேரச்செய்து, சிறந்தபோதனு சக்திவாய்ந்த வித்வான்களைக்கொண்டு நல்ல விஷயங்களைக் கேட்கச் செய்யலாம். இதிஹாஸ புராணங்களிலுள்ள சிறந்த கதைகளை மனத்தை கவரும் வழியில் சொல்லச் செய்து தர்மங்களையும் நீதிகளையும் கற்கச் செய்யலாம். ஸந்த்யா வந்தனம் முதலான வைதிக க்ரியைகளுக்கு அவச்யம் வேண்டிய வேத மந்த்ரங்களையும், ஸ்தோத்ர பாடங்களையும் திவ்யப்ரபந்தங்களையும் யதா சக்தி அப்யஸிக்கச்செய்து அவைகளின் அர்த்தத்தையும், மேன்மையையும் உணரச் செய்யலாம். சுருங்கச் சொல்லில், ஒவ்வொரு மடமும் பகவத் ஸந்நிதியாக மாத்ரமல்லாமல் ஸந்மார்கத்தையும் ஸத்ஸம்ப்ரதாயத்தையும் எளிதில் போதிக்கும் ஒரு சிறுபாடசாலையாகத் திகழும்படி செய்யலாம். இப்படி ஒவ்வொரு ஊரிலும் நடந்துவந்தால் எங்கும் தர்ம ராஜ்யமேற்பட்டு ஸகலலோக க்ஷேமம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

நமது ஸநாதன தர்மத்தின் இப்போதைய துர்தசையைப்பற்றி வருந்துபவர்களில் சிலர் நமது மடாதிபதிகள் பற்பல கார்யங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, பொறுப்பு முழுதும் மடாதிபதிகளைச் சார்ந்ததென்று தோன்றும் ரீதியில் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். அது முற்றிலும் உண்மையன்று. மடாதிபதிகள் மடங்களைக் கட்டிவைக்கலாம்; நல்ல விஷயங்களைப் பற்றி நேரிலும், திறமை வாய்ந்த ப்ரசாரகர்களைக் கொண்டும் ப்ரசாரம் செய்யலாம்; வேறு என்ன செய்ய முடியும்? அப்படிப்பட்ட மடங்களுக்குச் சென்று

அந்த ப்ரசாரங்களைக்கேட்டு அதன்படி நடக்க நாம் முற்படாமல் மடாதிபதிகளைப் பற்றி குறை கூறுவதில் பயனில்லை, நாம் மேலே எடுத்துக் காட்டியபடி ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்கள் சிறுவர்களை ப்ரதி தினமும் அங்குள்ள மடத்திற்கு (மடம் இல்லாவிட்டால் அதுபோன்ற ஒரு இடத்திற்கு) அனுப்பி ஆத்மாவிற்கு ச்ரேயஸ்கரமான விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். தாங்களும் அடிக்கடி சென்று நல்ல உபந்யாஸங்களைச் செய்யக்கேட்டு அதன்படி நடந்து வரவேண்டும். அந்தந்த மடங்களில் ஆராதநத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்வாமிகளும் சிறுவர்களுக்கு போதிப்பதை ஒரு கைங்கர்யமாக நினைத்து, சிறுவர்களுக்கு அவச்யாபேக்ஷிதமான விஷயங்களைச் சொல்லிக்கொடுக்க ஸந்தோஷத்துடன் முன் வருவார்களென்றே நாம் நம்புகிறோம். அவர்களுக்கு ஸௌகர்ய மில்லாவிட்டால் அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ப்ரார்த்தித்தால் தகுந்த வித்வான்களை அனுப்பி வைக்க ஸ்ரீ அழகிய சிங்கர் பரமக்ருபையுடன் இசைந்தருளும்படியிருக்கும். அப்படி நல்ல விஷயங்களை போதிக்கும் ஸ்வாமிகளுக்கு தேஹயாத்ரை நடப்பதற்காக அந்தந்த ஊர் வாஸிகள் யதாசக்தி உபகரித்தலும் கடமையாகும்.

பரந்த அளவில் ஸித்தாந்த ப்ரசாரமும் ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியும் தேரிழுப்பதைப்போல் பஹுப்ரயத்ந ஸாத்யமான விஷயம். ஒருவர்மட்டுமோ அல்லது மிகமிகச் சிலரோ எவ்வளவு முயன்றாலும் த்ருப்திகரமான முன்னேற்றத்தை இவைகளில் நாம் எதிர்பார்க்க முடியாது. தேரடியில் நின்றுகொண்டு தேரை மற்றவர்கள் இழுக்கவேணும் என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டே நின்றுகொண்டிருந்தால் தேர் ஒரு அங்குலம் கூட நகராது. ஒவ்வொருவரும் தம் மாலியன்றவளவில் தேரை இழுப்பதற்கு உறுதிகொண்டு வடத்தைத்தொட்டு இழுக்க ஆரம்பித்தால் உடனே தேர் நகர்ந்து நிலையை நோக்கி விரைவில் செல்லும். இம்மாதிரி கார்யங்களில் பணத்தை மாத்ரம் வைத்துக்கொண்டு வெகுவாக ஒன்றும் ஸாதித்துவிட முடியாது. பலரின் முயற்சியே அதிகமாகத் தேவை. எல்லோருக்குப் ச்ரத்தை, உறுதி, ஐகமத்யம், அந்தரங்கசுத்தி, பிறரைக் குறை கூறாதிருத்தல், தலைவர் சொற்படி நடத்தல் முதலிய குணங்கள்தான் முக்யமாய் வேண்டியவை. ஸித்தாந்தம் ஸம்ப்ரதாயம் இவைகளை பரவச்செய்யும் விஷயத்திலும் அதைப்போலவேதான்.

ஆகையால் ஆங்காங்குள்ள ஆஸ்திக மஹாசயர்கள் ஒன்றுகூடி நாம் தெரிவித்துக்கொண்டபடி அங்குள்ள மடங்கள் தங்களுடைய ஆத்மார்த்தமான வழிகளில் நன்கு பயன்படும் வகையில் ஒரு திட்டத்தை நிர்மாணித்து அதை ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஸமர்ப்பித்து ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தைப் பெற்று அதன்படி நடந்து க்ருதார்த்தர்களாக வேண்டு மென்பதுதான் நம்முடைய ப்ரார்த்தனை. தேரழுந்தூர் வாஸிகள் ஏற்கனவே ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபையையும் அத்யாபக வேதபாராயண ஸமிதியையும் ஏற்படுத்தி இந்த ரீதியில் கார்யங்கள் செய்துவருவது எல்லோருக்கும் த்ருப்தியை அளிக்கிறது. அவர்கள் மேலும் இத்துறையில் நாம் ப்ரார்த்தித்துக்கொண்டபடி அபிவ்ருத்திகளைச் செய்து மற்றவர்களுக்கு மார்க்கதர்சிகளா யிருப்பார்களென்று நம்புகிறோம்.